முள்ளும் மலரும்



முள்ளும் மலரும்

(சிறுகதைத் தொகுதி)

ஆசிரியர் :
இளங்குமரன்

முன்னுரை :
திரு. ப. நீலகண்டன் அவர்கள்

மணி மன்றம்
தமிழ் நூல் வெளியீட்டகம்
மதுரை ரோடு :: திருச்சிராப்பள்ளி

மணி வெளியீடு—2.

முதல் பதிப்பு

பார்த்திப, பங்குனி *ஏப்ரல்*, 1946

விலை

ரூ. 1—2—0

"கலைவாணி" ஆசிரியர்

திரு. ப. நீலகண்டன் அவர்கள்

முன்னுரை

முள்ளும் மலரும் என்னும் இக்கதைத் தொகுதியைப் படித்ததும் வியப்படைந்தேன். தூய்மையான தமிழிலும் அழகிய கதைகளை எழுத முடியுமென்பதை "இளங்குமரன்" நிரூபித்துவிட்டார். தமிழ்ச் சிறு கதைகள் என்றால் தமிழ் மரபுக்கும் தமிழ்ப் பண்புக்கும் மாறுபடாதபடி இருக்க வேண்டுமல்லவா? இத்தொகுதியிலுள்ள அத்தனை கதைகளும் உண்மையான தமிழ்க் கதைகள்.

இத்தொகுதியில் என் உள்ளம் ஈடுபட்டுவிட்டதற்கு முதற் காரணம் நடை அழகுதான். தேனொழுகும் நடை. இனிமையாகக் கதை சொல்லும் முறை "இளங்குமர"னுக்கு நன்கு அமைந்திருக்கிறது.

முள்ளும் மலரும் கதையில் வரும் மரகதவல்லி இளங்குமரனின் லட்சியப் பெண். துன்பத்தின் எல்லையை அடைந்தும்கூட அவள் கணவன் மேல் கொண்ட காதல் சிறிதும் குறையவில்லை. அவள் எங்கே போனாள்? எல்லாத் துயரங்களிலுமிருந்து விடுபட்டு இன்பத்தை நாடிச் சென்று விட்டாளோ? மறலியின் அரவணைப்பிலேதான் அவள் இன்பம் காணவேண்டும். வேறு வழி?

இலக்கியம் வேறு வாழ்க்கை வேறு என்பதை இரண்டாவது கதையில் அழகாகச் சித்திரிக்கிறார் ஆசிரியர். நல்ல கற்பனை. காத்தாயி கிராமியப் பெண். மாட்டுக்குப் பருத்திக்கொட்டை வாங்கிவரும்படிதான் அவள் சொல்லுவாள்! அவள் சினிமாக் கதாநாயகி அல்லவே!

கதையைப் படித்து முடித்ததும் உள்ளுக்குள்ளே சிரித்துக் கொள்ளுகிறோம். உயர்ந்த நகைச்சுவை. இலக்கியத்தைப் போல வாழ்க்கையும் இருக்கவேண்டுமென்று கனவு கண்டு அவதியுறும் அநேக இளைஞர்களுக்குக் கறுப்பண்ணன் முன் மாதிரி.

மோசக்கார தாசிகள் என்பது பழமொழி. அக் குலத்தில் பிறந்தவள்தான் மாதவியும். அவளுடைய உண்மைக் காதலிலும் ஒழுக்கத்திலும் யாருக்கேனும் சந்தேகம் தோன்றமுடியுமா? "தாசியின் காத"லில் இளங்குமரன் ஒரு மாதவியைச் சிருஷ்டித்திருக்கிறார்.

வெண்பாப் புலி, பிற்காலப் புலவரின் வாழ்க்கை நிகழ்ச்சியை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்ட கற்பனைக் கதை; மிகுந்த நகைச்சுவையுடன், புலவரின் திறமையை எடுத்துக் காட்டுவதாயிருக்கிறது.

நேர்மை அளித்த பரிசு இத்தொகுதியின் சிகரமான கதை. மிக உருக்கமானது. விறுவிறுப்பு நிறைந்தது. பணத்தைக்கொண்டு தம் குற்றத்தை மறைத்ததோடு நீதியையுமல்லவா உடைத்தெறிந்துவிட்டார் அந்தக் கள்ள வியாபாரி! மாணிக்கவாசகம் மௌனமாயிருந்தான் என்கிறார் ஆசிரியர். வேறென்ன செய்யமுடியும்? வேண்டுமானால் நிகழ்ச்சியைக்கண்டு நகைத்திருக்கலாம்.

இளங்குமரனின் இக்கதைத் தொகுதிக்கு என் மனமார்ந்த பாராட்டு.

புதுக்கோட்டை
9—4—46

ப. நீலகண்டன்.

குறிப்பு

இதிலுள்ள கதைகள் வெவ்வேறு காலங்களில் எழுதப்பட்டு, 'இந்திரா' 'கலைவாணி' முதலிய பத்திரிகைகளில் வெளிவந்தனவாகும். அப்பத்திரிகாசிரியர்களுக்கு எனது நன்றி. இறுதிக் கதை ஆசிரியர் பிரேம்சந்த் அவர்களின் கதையொன்றைத் தழுவியது. 'இயற்கை முடிவுடன் இருந்தால் என்ன?' என்ற வினாவின் பயனே இது.

சிறிய இப்புத்தகத்திற்கு அரிய முன்னுரையளித்துள்ளார், 'கலைவாணி' ஆசிரியர் திரு. ப. நீலகண்டன் அவர்கள். மகிழ்ச்சி!

இளங்குமரன்.

இத்தொகுதியுள் :

1. முள்ளும் மலரும்
2. கற்பனையும் வாழ்க்கையும்
3. கைம்பெண் கமலா
4. தாசியின் காதல்
5. வெண்பாப் புலி !
6. பட்டதாரி
7. நேர்மை அளித்த பரிசு !

முள்ளும் மலரும்

"நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும்" என்பார்கள். இது சோமசுந்தரம் பிள்ளை விஷயத்தில் எவ்வளவு உண்மையாய்விட்டது! அவர், தன் மகள் மரகதவல்லி, தன்னைப்போன்ற தனவந்தன் ஒருவனுடைய பிள்ளைக்கே வாழ்க்கைப்படவேண்டுமென்று விரும்பினார். அங்ஙனமே தன் விருப்பத்தை நிறைவேற்றினார். அந்த விருப்பத்தில் மாப்பிள்ளையின் குணம் செயல்களை ஆராய வேண்டுமென்ற எண்ணமே அவருக்குத்தோன்றவில்லை. பணம் ஒன்றையே குறியாகக்கொண்டு மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்தார். செல்வம் நிறைந்த மாப்பிள்ளையாயிருந்தால், தன் மகள் சீரும் சிறப்பும் பெருகக் கணவனுடன் கூடி இன்பமாய் வாழ்வாள் என்று அவர் ஆசையுடன் எண்ணினார். ஆனால், அந்த எண்ணம் எத்தகைய மாறான பலனை அளித்துவிட்டது!

சோமசுந்தரம் பிள்ளை திருச்சிராப்பள்ளியில் பெரிய கண்டிராக்டர். அந்தவகையில் பெரும் பொருள் தேடினார். 'இலட்சாதிபதி' என்று அவரை எல்லாரும் குறிப்பிடுவார்கள். மரகதவல்லி அவருக்கு ஒரே மகள்.

மரகதவல்லி நற்குணங்கள் நிறைந்த நங்கை; ஏழாம் வகுப்பு வரையில் வாசித்தவள். பன்னிரண்டாம் வயதிலேயே அவள் பருவமடைந்துவிட்டபடியால், பழைய கட்டுப்பாட்டுக்கடங்கிப் பள்ளிக்கூடம் செல்லாமலிருந்துவிட்டாள். பதின்மூன்றும் வயதில் கும்பகோணத்திலுள்ள

சுந்தரமூர்த்தி என்னும் அழகிய இளைஞனுக்கு மாலையிட்டாள். திருமணப் பந்தலில் தன் கணவனைக் கடைக் கண்ணால் பார்த்துக் களிப்படைந்தாள்; அவனது கட்டழகை யெண்ணி உடம்பு பூரித்தாள். பின்னால் பேரிடி விழப் போவதை, அந்தோ! அப்பேதை எங்ஙனம் அறிவாள்?

திருமணம் மிகச் சிறப்பாய் நடந்தேறியது. சில நாட்கள் வரையில் ஊரெங்கும் இதைப்பற்றிய பேச்சாகவே இருந்தது. திருமணம் முடிந்த ஆறாவது மாதத்திலிருந்து மரகதவல்லி தன் கணவனுடன் வாழலானாள்.

கும்பகோணத்தில் குமாரசாமிப் பிள்ளை என்றால், அந்தச் சுற்று வட்டாரத்தில் எல்லோருக்கும் தெரியும். அவர் வெண்கலப் பாத்திர வியாபாரி; பெருந் தனவந்தர். அவர் மகன் சுந்தரமூர்த்தி.

சுந்தரமூர்த்தி பத்து வயதாயிருக்கும் பொழுதே குமாரசாமிப் பிள்ளை காலமானார். அதனால் சுந்தரமூர்த்தி எவருக்கும் அடங்காமல் தான்தோன்றியாய்த் திரியலானான். ஆடம்பரமாய்த் திரிவதில் அதிக ஆசை கொண்டான். துன்மார்க்கர்களுடைய பழக்கம் ஏற்பட்டது.

குமாரசாமியின் தாய் அவன் நடவடிக்கைகளைப் பார்த்து மனம் வருந்தினாள். ஆனால், தான் கொடுத்த செல்லத்தினால்தான் சுந்தரமூர்த்தி இவ்வாறானான் என்பதை அவள் எண்ணிப் பார்க்கவில்லை. விவாக விலங்கைப் பூட்டி விட்டால் பையன் அடங்கி விடுவான் என்று அவள் நினைத்தாள்.

"பொருள் திரட்டுவதே புண்ணியத் தொழில்; அதைக் கண்டு ஆனந்திப்பதே அரிய சொர்க்கம்" என்று இரவுபகல் முழுவதும் எண்ணும் இயல்புடைய சோமசுந்தரம் பிள்ளை, பெரும் பணக்காரனான சுந்தரமூர்த்தியைக் கண்டால்

விட்டு விடுவாரா? அதிலும் அவன் குமாரசாமிப் பிள்ளைக்கு ஒரே பிள்ளை! ஆதலால், அவர் தம் அருமைக்குமாரி மரகதவல்லியைச் சுந்தரமூர்த்திக்கு மனைவியாக்கினது பற்றி நாம் அதிசயிக்க வேண்டியதில்லையல்லவா?

மரகதவல்லி கும்பகோணம் வந்து மூன்று வருடங்கள் கழிந்தன. அவள் தன் கணவனுடன் வாழும் வகைகளை எண்ணியெண்ணி மனக்கோட்டை கட்டியிருந்தவையெல்லாம் வெறுங்கனவாய்ப் போய் விட்டதைக் கண்டு ஏங்கி நின்றாள். தன் கணவன் தன்னை மறந்து வேசிகள் மையலிற் சிக்கிக் குடித்துக் கொண்டு தாறுமாறாய்த் திரிவதை நினைக்க நினைக்க அவள் மனம் அனலிலிட்ட மெழுகே போல் உருகியது. உணவு, உறக்கம் இரண்டையும் மறந்தாள்; உருவமும் மாறினாள். இன்றில்லா விட்டாலும் நாளையொரு நாள் தன் கணவன் மனம் மாறித் தன் முகத்தைப் பார்க்க மாட்டானா என்னும் ஓர் எண்ணமே, அவள் உடலிலிருந்து உயிர் பிரியாமல் தங்கி நிற்பதற்குக் காரணமாயிருந்தது. இந்நிலையில் பின்னும் இரண்டு வருடங்கள் கழிந்தன.

2

ஒரு நாள் மாலை ஆறு மணியிருக்கும். மரகதவல்லி சோகமே உருக்கொண்டது போல் தன் வீட்டின் கூடத்தில் உட்கார்ந்திருக்கிறாள். அவள் எதிரில் கம்பராமாயண வசனப் புத்தகம் விரித்து வைக்கப்பட்டிருக்கிறது. விரிக்கப் பட்ட இடம் சுந்தரகாண்டம். மரகதவல்லி, சீதை இலங்கையில் தன் கணவனை எண்ணியெண்ணி ஆறாத் துயரடைந்தாள் என்பதைப் படித்து விட்டு அதில் தன் மனத்தைச் செல்ல விட்டுப் பதுமை போல் அசைவற் றிருந்தாள். அச்சமயம் ஒரு மோட்டார் வண்டி அவள்

வீட்டு முன்னால் வந்து நின்றது. மரகதவல்லி எழுந்து நின்றாள். சுந்தரமூர்த்தி உள்ளே நுழைந்தான்.

"மரகதவல்லீ! நான் சென்னபட்டினத்திற்குப் போகப் போகிறேன். உனக்கு ஏதாவது வேண்டுமா?"

சுந்தரமூர்த்தி இவ்வளவு நிதானமாகத் தன் மனைவியிடம் அன்பு காட்டும் முறையில் பேசியது இதுவே முதல் முறை. ஆதலால், மரகதவல்லிக்கு மகிழ்ச்சி ஒரு பக்கம்; பயம் ஒரு பக்கம். பேசாமலிருந்தாள்.

"என்ன மரகதவல்லீ! நான் கேட்கிறது காதில் விழவில்லையா?"

மரகதவல்லியின் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது. வாயைத் திறக்க முயன்றாள்; முடியவில்லை. மறு நிமிடம் ஒரு நாற்காலியைத் தூக்கி வந்து சுந்தரமூர்த்தியின் அருகிற் போட்டு விட்டு ஒரு தூண் மறைவில் நின்றாள்.

"மரகதவல்லீ! நீ பேசாமடந்தையா?"

"எனக்கு ஒரு சாமான் வேண்டுந்தான்"

இதைத் தெரிவிப்பதற்குள் மரகதவல்லி நடுங்கினாள்.

"என்ன சாமான்?"

"என்னை மன்னியுங்கள். நான் கேட்கும் பொருளைத் தாங்கள் தரமாட்டீர்களென்று எனக்குத் தோன்றுகிறது. ஆகையால் நான் அதைக் கேட்டுத் தங்களுக்கு மன வருத்தம் உண்டாக்க விரும்பவில்லை."

பெரிய வைர மாலை போன்ற நகைகளில் ஏதோ ஒன்றைக் கேட்பதற்காகத்தான் மரகதவல்லி இந்தப் பெரிய அஸ்திவாரத்தைப் போடுகிறாளென்று சுந்தரமூர்த்தி நினைத்தான்.

"நீ படித்தவளென்று எனக்குத் தெரியும். வழவழ வென்று வார்த்தையை வளர்க்காமல் வேண்டியதைக் கேள்!"

"கேட்கட்டுமா?"

"சீக்கிரம்! நான் போகவேண்டும்."

சிறிது நேரம் ஒருவரும் பேசவில்லை.

"என்ன மரகதவல்லி?"

"நான் கேட்கும் பொருள் தாங்களே. தங்களை எனக்குத் தருவீர்களா?"

இவ்வாறு தழுதழுத்த குரலில் சொல்லிக்கொண்டே, கண்களில் முத்து முத்தாய்க் கண்ணீர்த் துளிகள் சிந்த, மரகதவல்லி சுந்தரமூர்த்தியின் காலடியில் வீழ்ந்தாள்.

சுந்தரமூர்த்தி பிரமித்து விட்டான். அவன் நினைத்து வந்தது ஒன்று, நடந்தது வேறொன்றாய் விடவே, அவன் மனத்தில் கோபம் பொங்கியது. நாற்காலியை விட்டு எழுந்து நின்றான். மரகதவல்லி கண்ணீர் விட்டுத் தேம்புவதைக் காணவே அவன் சினம் சீறியெழுந்தது.

"ஏ மூதேவி! நீ எப்பொழுது பார்த்தாலும் அழுத மணியமாயிருக்கிறாய். உனக்கு ஆசையான பொருள் ஏதாவது வாங்கி வரலாமென்று எண்ணினால், நீ என்னென்னவோ பிதற்றுகின்றாயே! தொலை சனியனே!"

சுந்தரமூர்த்தி இவ்வாறு சொல்லிக் கொண்டே மரகதவல்லியைக் காலால் உதைத்து விட்டு மோட்டாரில் ஏறிப் போய் விட்டான்.

சுந்தரமூர்த்தி பெரும்பாலும் வீட்டுக்கு வரமாட்டான். வந்த அன்றைக்கு வீடே அமர்க்களப்படும். குடி-

வெறியினால் தாயென்றும் மனைவியென்றும் பாராமல் தாறுமாறாய்ப் பேசுவான். காரணமில்லாமலே மரகதவல்லியின் கூந்தலைப் பற்றி இழுத்துப் போட்டு உதைப்பான்.

3

சுந்தரமூர்த்தியின் தடபுடல் செலவுகளினால் அவனுடைய சொத்துக்கள் யாவும் இருந்தவிடந் தெரியாமல் மறைந்தன. கடையை இவன் கவனிப்பதேயில்லையாதலால் நாளுக்கு நாள் வியாபாரம் குறைந்து, முடிவில் அது மூடப்பட்டது. கடன்களோ வட்டியும் முதலுமாய் வளர்ந்து பெருகியிருந்தன. கடையும் மூடப்பட்டுச் சொத்தும் தொலையவே 'வாரண்டுகள்' பல சுந்தரமூர்த்தியின் தலையைத் தேடிப் புறப்பட்டன! அவற்றிற்கெல்லாம் மரகதவல்லி தன் தந்தையிடமிருந்து பணம் வருவித்துக் கொடுத்துக் காத்தாள். நன்றாய்ச் செலவு செய்த கை நிற்குமா? மரகதவல்லியின் உயர்ந்த நகைகள் ஒவ்வொன்றாய் ஓடி மறைந்தன!

சுந்தரமூர்த்தி ஒரு நாள் நன்றாய்க் குடித்து விட்டு வந்து மரகதவல்லியை முரட்டுத் தனமாய் அடித்துத் தொந்தரவு செய்து ரயிலேற்றித் திருச்சிக்கு அனுப்பினான். அவள் பணம் நகைகளுடன் திரும்பி வர வேண்டுமென்பது அவன் உத்தரவு.

வாழ்ந்தாலும் கெட்டாலும் தன் கணவன் வாழும் ஊரிலேயே வசிக்க வேண்டுமென்னும் சிறந்த எண்ண முடையவள் மரகதவல்லி. ஆதலால், அவள் திருச்சி சென்ற பத்துப் பதினைந்து நாட்களிலேயே தன் தாயின் தூண்டுதலால் தந்தை வாங்கிப் போட்ட மறு ஜோடிப்பு நகைகளுடனும் அவர் கொடுத்த சிறிது தொகையுடனும்

கும்பகோணம் வந்து சேர்ந்தாள். சுந்தரமூர்த்தி தன் எண்ணம் பலித்தது கண்டு மகிழ்ந்தான். இது எத்தனை நாளைக்கு?

ஆறு மாதங்கள் கழிந்தன. கும்பகோணம் ரயில்வே ஸ்டேஷனில் ஒரு புறத்தில் மரகதவல்லி நீர் ததும்பும் கண்களுடன் நிற்கிருள். சுந்தரமூர்த்தி சென்னையிலிருந்து வரும் வண்டியை எதிர் பார்த்துக்கொண்டிருக்கிருன். இச்சமயத்தில் வெள்ளைக் கலையுடுத்திய ஒரு பாட்டியம்மாள் வந்தாள். அவள் மரகதவல்லியை உற்றுப் பார்த்தாள். "ஏண்டியம்மா இப்படிப் பொறந்த கோலமா நிக்கறே? அதோ நிக்கறவன் உன் ஆம்படையாளு?" என்று கேட்டாள். மரகதவல்லி பதில் பேசவில்லை; தன் முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். இதற்குள் ரெயில் வண்டி வந்து நின்றது.

"என்னை எதற்குத் திருச்சிக்கு அனுப்புகிறீர்கள்? நான் வேண்டாமென்ருல் உங்கள் கையாலேயே என்னைக் காவேரியாற்றில் தள்ளி விடுங்கள். உங்களுக்குப் புண்ணியமாகும்" என்று அழுகையுடன் சொன்னுள் மரகதவல்லி.

"கழுதை! வாயைத் திறக்காதே! ஏறு வண்டியில்!" என்று கத்தினுன் சுந்தரமூர்த்தி.

மரகதவல்லி பேசாமல் வண்டியிலேறினுள். அடுத்த நிமிடம் வண்டி நகர்ந்தது.

4

"மரகதவல்லி! உன் தலையெழுத்து இவ்விதமிருக்குமென்று நான் கனவிலும் கருதவில்லை. உன் குணத்திற்கு இந்த முரட்டுக் குடிகாரன் கணவனுய் வாய்த்திருக்கக் கூடாது. என்னவோ உன் விதி. உன் தந்தை, மாப்பிள்ளை

பணக்காரன் என்பதில் புத்தியைப் பறி கொடுத்து உன்னை அநியாயமாய்க் கெடுத்து விட்டார்."

"அம்மா! நான் பாவி. என்னை எவ்வளவு வேண்டுமானாலும் நிந்தியுங்கள். என் காது கேட்க அவரை நிந்தியாமலிருக்க வேண்டுகிறேன். என் மேலிருந்த நகைகள் செய்த பாக்கியம் கூட நான் செய்யவில்லை."

மரகதவல்லி இம்மொழிகளை விம்மியழுதுகொண்டே சொன்னாள். அன்னம்மாள் கண்ணீரை வடித்துக்கொண்டே தன் மகளைத் தேற்றினாள்.

ஒரு மாதம் சென்றது. மரகதவல்லி கும்பகோணம் போக வேண்டுமென்றாள். சோமசுந்தரம் பிள்ளையும் அன்னம்மாளும் எவ்வளவோ சொல்லியும் அவள் கேட்கவில்லை. பிறகு என்ன செய்வது? சோமசுந்தரம் பிள்ளை தன் மகளை அழைத்துக்கொண்டு புறப்பட்டார். இம்முறையும் அவர் மரகதவல்லிக்கு வேண்டிய நகைகளையெல்லாம் வாங்கி அணிவித்திருந்தார். கும்பகோணம் ஸ்டேஷனில் இறங்கி அவளை ஒரு ஒற்றை மாட்டு வண்டியில் ஏறச் செய்து, அவளிடம் ஆயிரம் ரூபாய்களைக் கொடுத்து அனுப்பினார். சுந்தரமூர்த்தி தன்னை மரியாதையாக நடத்தவில்லையென்ற காரணத்தால், சோமசுந்தரம் பிள்ளை அவனைப் பார்க்க விரும்பவில்லை. மரகதவல்லி கண்ணீருடன் தன் தந்தையை விட்டுப் பிரிந்தாள். சோமசுந்தரம் பிள்ளை தன் மேல் துண்டினால் கண்களைத் துடைத்துக் கொண்டு அடுத்த வண்டியில் திருச்சிக்குப் புறப்பட்டார்.

இருபது நாட்களே சென்றன. மரகதவல்லி தள்ளாடிய நடையுடன் சோமசுந்தரம் பிள்ளை வீட்டினுள் நுழைந்தாள். அன்னம்மாள் ஓடி வந்து தன் மகளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கோவென்று கதறினாள்.

மரகதவல்லியின் இரண்டு தொடைகளிலும் சூடுகள் போடப்பட்டிருந்தன. இதைக் கண்ட பெற்ரோரின் மனத் துயரை எந்த மொழிகளால் எடுத்துரைப்பது?

5

சுந்தரமூர்த்தி சிறையில் வைக்கப்பட்டானென்று கும்பகோணமே 'கொல்'லென்றிருந்தது. மரகதவல்லி கண்ணீர் விட்டாள். உடனே கும்பகோணம் போக வேண்டுமென்று தன் தந்தையிடம் மன்ருடினுள்.

" மரகதம்! நான் உனக்கு எவ்வளவு சொன்னுலும் கேட்கமாட்டேனென்று பிடிவாதம் செய்கிருய். அந்தக் குடிகார நாய் — முரட்டுப் பயல் எக்கேடு கெட்டால் என்ன? அவனை ஏன் நினைக்கிருய்? இங்கேயே உன் காலத்தைக் கழித்து விடு."

" என்னைக் கலியாணம் செய்து கொடுக்காமல் இருந்திருந்தால் நான் அவ்வாறே இருப்பதற்கு ஆசைப் படுவேனப்பா!"

" இப்பொழுது தான் என்ன கெட்டது? இனி அந்த மூடனிடம் அகப்பட்டு நீ துன்பப்பட வேண்டாம். இங்கேயே இன்பமாய் இரு."

" இன்னம் ஒரு பிறப்பில் வேண்டுமானுல் நான் அவரிடம் அகப்படாமலிருக்கலாம். அவர் சிறைச்சாலையில் இருக்கும்பொழுது நான் இங்கே இன்பமாய்ப் பொழுதைக் கழிப்பது எவ்வாறு? இன்பம்......அதற்கும் எனக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது?"

" மரகதம்! கற்ற கல்வியைப் பெற்ரோரிடம் காட்டுவது தான் அழகு! சரி, உனக்கு என்ன செய்யவேண்டுமென்கிருய்? இனி ஒரு முறை அந்த மிருகத்தினிடம்

உன்னை அனுப்ப நான் சம்மதிக்கவேமாட்டேன். உன்னை உதைத்துத் துரத்துவதால் தனக்குப் பணம் கிடைக்கு மென்பதை அவன் நன்றாய்த் தெரிந்து கொண்டான். அதற்கேற்றபடி நீயுமிருக்கிறாய். நீ பிடிவாதஞ் செய்தால் உன் விருப்பம் போல் புறப்படு. ஆனால் ஒன்று மாத்திரம் ஞாபகத்தில் வைத்துக்கொள். என் வார்த்தைகளைக் கேட்காத உன்னை இன்று முதல் என் மகளல்லள் என்று தீர்மானித்து விட்டேன். நீயும் உன் தகப்பன் இறந்து விட்டானென்று உறுதியாய் எண்ணிக்கொள். அதன் பிறகு அந்த அயோக்கியன் அடித்தான், உதைத்தானென்று என் முகத்தில் விழிக்க இங்கு வராதே, என்ன தெரிகிறதா ?"

மரகதவல்லி முகத்தை மூடிக்கொண்டு அழுதாள். அன்னம்மாள் அவளைத் தேற்றினாள். சோமசுந்தரம் பிள்ளையும் மரகதவல்லியும் கும்பகோணத்திற்குப் புறப்பட்டார்கள்.

சுந்தரமூர்த்தி சிறையிலிருந்து மீட்கப்பட்டான். சோமசுந்தரம் பிள்ளை மரகதவல்லியிடம் இரகசியமாக இரண்டாயிரம் ரூபாயைக் கொடுத்துவிட்டுத் திருச்சி போய்ச் சேர்ந்தார்.

சிறையிலிருந்து தன்னை மீட்டதைக் குறித்துச் சுந்தரமூர்த்தி சிறிதும் நினைக்கவில்லை. மரகதவல்லி நிறைய நகைகளுடன் வரவில்லையேயென்று கறுவினான். இரண்டாயிரம் ரூபாய்களும் இரண்டு மாதங்களில் தொலைந்தன. சுந்தரமூர்த்தி வேறு என்ன செய்வான் ? மரகதவல்லியைத் திருச்சிக்குத் துரத்தத் தொடங்கினான். ஆனால், அவன் எவ்வளவு கொடுமை செய்தாலும் உயிரோடு திருச்சிக்குப் புறப்படுவதில்லையென்ற உறுதியுடன் இருந்தாள் மரகதவல்லி. சோமசுந்தரம் பிள்ளையின் மொழிகள் அவள் மனத்தில் ஆழமாய்ப் பதிந்திருந்தன.

சுந்தரமூர்த்தியின் கையில் ஒரு பைசாக் கூட இல்லை. இந்நிலையில் எவருக்கும் கோபம் ஏற்படுவது இயல்புதானே! மரகதவல்லியை திருச்சிக்குப் போகும்படி வற்புறுத்தினான். அவள் மறுத்தாள். அதனால் அவன் சீறி யெழுந்தான். "என் சொல்லை மறுக்கிறாயா" என்று சொல்லி அருகிலிருந்த ஒரு விறகுக் கட்டையை எடுத்து மரகதவல்லியின் மேல் வீசி யெறிந்தான். அது வேகமாய்ச் சென்று அவள் மண்டையில் தாக்கியதால் பொறி கலங்கிக் கீழே விழுந்து மூர்ச்சையானாள். கண் விழித்துப் பார்க்கும்பொழுது, தான் கும்பகோணம் ரயில்வே ஸ்டேஷனில் இருப்பதை யுணர்ந்தாள்.

"அகங்காரம் பிடித்த பேயே! தெரிந்து கொண்டாயா என் சங்கதியை? உன் அப்பனிடம் பத்தாயிரம் ரூபாயாவது, நகைகளாவது வாங்கிக்கொண்டு வந்தால் இங்கே கலை காட்டு. வெறுங்கையுடன் இங்கு வந்தாயோ, உன் உயிர் எமனுக்கு விருந்தாய்விடும். தெரிந்ததா?" என்று உறுமினான்.

"நான் திருச்சிக்குப் போகவில்லை. வேண்டுமானால் இப்பொழுதே என்னைக் கொன்று விடுங்கள்" என்று தேம்பிக்கொண்டே கண்ணீரைப் பெருக்கினாள், இன்பமே காணா இள நங்கை.

சுந்தரமூர்த்தி மரகதவல்லியைப் பலவந்தமாய்ப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய் ரயிலேற்றிவிட்டு, வண்டி புறப்பட்டதும் அவ்விடம்விட்டகன்றான்.

பத்து நாட்களாயின. மரகதவல்லி இன்று வருவாள், நாளை வருவாள் என்று சுந்தரமூர்த்தி அவளை எதிர்பார்த்த வண்ணமிருக்கிறான். சோமசுந்தரம் பிள்ளையோ தன் மகள் சுந்தரமூர்த்தியுடன் கூடி வாழ்கிறாள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார். ஆனால், மரகதவல்லி எங்கே? அதை யார் சொல்லக் கூடும்?

கற்பனையும் வாழ்க்கையும்

கமலாம்பாள் சோகங்கலந்த முகத்துடன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருக்கிறாள். பக்கத்தில் அவள் கணவன் கோபாலன் நின்றுகொண்டிருக்கிறான்.

கமலாம்பாள் :—ஆனாலும் உங்கள் மனம் இப்படிக் கல்லாய்ப் போகக் கூடாது!

கோபாலன் :—கமலா! இப்படி என் முகத்தைப் பார்!

கமலாம்பாள் :—பார்க்க மாட்டேன்! என்னோடு பேசாதீர்கள்!

கோபாலன் :—அடேயப்பா! எவ்வளவு முறுக்கு! ஒரேயொரு நாள்தானே! இதைப் பொறுக்கலாகாதா? நீயும் சாதாரணப் பெண்களைப்போல் பேசுகிறாயே!

கமலாம்பாள் :—நான் சாதாரணப் பெண்தான். உங்களைப் போல் பி. ஏ., பி. எல். வாசித்திருக்கிறேனா? நீங்கள் சாமர்த்தியமாய்ப் பேசி விடுகிறீர்கள்! ஒரு நாளென்றால் உங்களுக்கு அற்பமாய்த் தோன்றுகிறது! எனக்கு?.........நான் மாட்டேன். என்னைவிட்டு அரை நிமிஷமும் பிரிவதில்லையென்று வாக்குறுதி தந்தீர்களே! அதெல்லாம் காற்றில் போய்விட்டதாக்கும்! ஆண்களுடைய பேச்சே இப்படித்தான்!

கோபாலன் :—ஏதேது பெரிய பிரசங்கமே செய்து விடுவாய் போலிருக்கிறதே! கமலா! சொல்லுகிறதைக் கேள்! நாளை ஒரு நாள்தான். மறுநாட் காலையில் நான் உன் பக்கத்தில் இருப்பேன்! போய் வரட்டுமா?

கமலாம்பாள் :—கூடாது. நாளை ஒரு நாள்தான் என்று சுலபமாய்ச் சொல்லிவிடுகிறீர்கள். அது வரையில் நான் எப்படி உங்களைப் பிரிந்து தனிமையில் இருப்பேன்? இன்றிரவு..............நாளைப் பகல்..........நாளையிரவு......... ஊஹூம்......என்னால் முடியாது. நீங்கள் போகக்கூடாது. "வர முடியவில்லை" என்று தந்தி அடித்துவிடுங்கள்.

கோபாலன் :—கமலா! அவ்வாறு செய்யலாமா? வழக்கில் ஆஜராகிப் பேச ஒப்புக்கொண்டபிறகு போகாமல் இருந்து விட்டால் அது ஒழுங்காகுமா? அப்படிச் செய்வது நமக்குக் கௌரவக் குறைவல்லவா? மேலும் இது முக்கியமான கேஸ். நான் போகாமல் இருந்துவிட்டால் என் கட்சிக்காரன் மிகவும் பாதகமடைவான். கண்ணல்லவா நீ! விடை கொடு!

கமலாம்பாள் :—நீங்கள் போகத்தான் வேண்டுமென்றால் என்னையும் அழைத்துக்கொண்டு போங்கள். இல்லாவிட்டால் நான் விடை தரமாட்டேன்.

கோபாலன் :—கண்ணே! நீ சொல்லுவது சரிதான். ஆனால் உன்னை நான் அழைத்துக்கொண்டு போனால் உனக்காக ஒரு தனி வீடு பார்க்கவேண்டும். துணையாள் வேண்டும். மேலும் நான் போகும் காரியம் ஒரே நாளில் முடியக்கூடியது. உடனே திரும்பவேண்டியதுதான். இந்நிலையில் இந்த ஏற்பாடுகள் அநாவசியமாகுமல்லவா?

கமலாம்பாள் :—சென்னையில் ஒரு பெண்பிள்ளை தங்குவதற்கு இடந்தரும்படியான பெருந்தன்மையுள்ளவர்கள் இல்லாமலா போய்விட்டார்கள்? இதெல்லாம் வீண் பேச்சு! என்னை அழைத்துக்கொண்டு போக உங்களுக்கு மனமில்லை. நான் வந்தால் உங்கள் கேஸ் விஷயத்திற்குத்

தொந்திரவாக இருப்பேனென்று நினைக்கிறீர்கள்! எனக்கா தெரியாது உங்கள் விஷயம்?

கோபாலன் :—கமலா! இதோ பார்! வருகிற கிறிஸ்துமஸ் விழாவுக்கு உன்னைச் சென்னைக்கு அழைத்துக் கொண்டு போகிறேன். வேண்டாம் பிடிவாதம்! ரெயிலுக்கு நேரமாய் விட்டது. விடை கொடு!

கமலாம்பாள் :—என்ன இருந்தாலும் நீங்கள் வக்கீல் அல்லவா? உங்கள் பேச்சை வெல்ல முடியுமா? முடிவில் உங்கள் கட்சிதான் ஜெயமடைகிறது! சரி...போய் வாருங்கள்! வரும்பொழுது என்ன வாங்கிக்கொண்டு வருகிறீர்கள் எனக்கு?

கோபாலன் :—அப்படிக் கேள்! இப்பொழுதுதான் நீ புத்திசாலி! உனக்கு மிகவும் பிரியமான மல்கோவா மாம்பழம் வாங்கி வருகிறேன். பிறகு என்ன வேண்டும்? சொல்!

கமலாம்பாள் :—அந்த மல்கோவா மாம்பழமெல்லாம் எனக்கு வேண்டாம். என்றும் தெவிட்டாத இந்த மல்கோவாவைச் சீக்கிரம் கொண்டு வாருங்கள்!

என்று சொல்லிக்கொண்டே எழுந்து கோபாலன் கன்னங்களைத் தன் இரு கைகளாலும் அன்போடு தடவி ஒரு முத்தமிட்டாள். கோபாலன் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தவனாய்க் கமலாம்பாளை இறுகத் தழுவி, அவளுடைய இரு கன்னங்களிலும் முத்தமழை பொழிந்து விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

❋

"சினிமா" பார்த்துக் கொண்டிருந்த கறுப்பண்ணன் மனத்தில் மேற்கண்ட காட்சி நன்ருய்ப் பதிந்து நின்றது. காட்சி முடிந்ததும் அவன் ஒரு பெருமூச்சு விட்டு எழுந்து

வெளியில் வந்தான். அப்பொழுது அவன் நிலைமை கனவுலகத்தில் இருப்பது போலவே இருந்தது. ஒருவாறு மனந்தெளிந்து வண்டியைக் கட்டிக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான்.

கருப்பண்ணன் கூத்தூர் என்ற சிறு கிராமத்தில் வாழும் விவசாயி. கூத்தூர் திருச்சிக்கு வடக்கில் சுமார் நான்கு மைல் தூரத்தில் இருக்கிறது. கறுப்பண்ணன் முப்பத்தைந்து கல நெல்லை, திருச்சிக்குக் கொண்டு வந்து விற்று விட்டுத் திரும்பும் பொழுது 'சினிமா' 'சினிமா' என்று சொல்லுகிறார்களே, அதைப் பார்த்துவிட்டுத்தான் போகலாமேயென்று ஆசைப்பட்டான். நியாயந்தானே?

இரண்டு நாட்கள் சென்றன. மீண்டும் இருபத்தைந்து கல நெல் மூட்டைகளை வண்டியில் அடுக்கிக் கொண்டு புதுக்கோட்டைக்குப் புறப்பட்டான். புதுக்கோட்டைச் சந்தையில் நெல் 'நல்ல' விலைக்குப் போகும் என்று அறிந்து அங்குக் கொண்டு போகத் தீர்மானித்தான். இரவு எட்டு மணிக்கு வண்டியைக் கட்டிப் புறப்பட்டால் விடியற்காலையில் சந்தைக்குப்போய்விடலாம். அன்று பகல் விற்பனையைப் பார்த்துக்கொண்டு இரவு அங்கேயே தங்கி, மாட்டை இளைப்பாறவிட்டு, மறுநாள் வாங்கவேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு மாலைதான் புறப்பட்டு வரவேண்டும். இரண்டு நாளைக்குவேண்டிய புளியஞ் சோற்றை அவன் மனைவி காத்தாயி பக்குவமாகத் தயார் செய்து மூட்டையாகக் கட்டிக்கொடுத்தாள்.

புறப்படுவதற்கு முன்னால் கறுப்பண்ணனுக்குத் தன் மனைவியைத் தனிமையில் சந்தித்து விடை பெற்றுக்கொண்டு போகவேண்டும் என்கிற ஒரு எண்ணம் அடக்கமுடியாத படி தோன்றியது! உடனே உள்ளே சென்றான். காத்தாயி சமையலறையில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தாள்.

கறுப்பண்ணன் :—வ குட்டி! காத்தாயி! நான் புதுக்கோட்டைக்கிப் போயிட்டு வரேன். என்ன, போயிட்டு வரவா? அதுக்காவதான் வந்திருக்கேன்.

காத்தாயி :—சந்தைக்கித்தானே? அதுக்கென்ன போயிட்டு வாயேன்! புளியஞ்சோத்து மூட்டைதான் கட்டித் திண்ணையிலே வச்சிருந்தேனே!

கறுப்பண்ணன் :—அதுக்கில்லே குட்டீ! ஒங்கிட்டே சொல்லிக்கினும்னுதான் வந்தேன்.

காத்தாயி :—அதாஞ் சொல்லியாச்சே! போயிட்டு வாயேன்!

கறுப்பண்ணன் :— இல்லே குட்டீ! இன்னக்கி ராப்பொழுது, நாளைக்கி ஒரு பகப்பொழுது, இன்னொரு ராப்பொழுது, அப்புறம் ஒரு பகப்பொழுது! இவ்வளவு தானே! பொறுத்துக்கினு இரு! நாளைய மறுநாளைக்கி சூரியன் மறைஞ்ச ரெண்டு நாளிக்கெல்லாம் வந்து விடுவேனில்ல!

காத்தாயி :—என்னு இது! பொறுத்துக்கினு இருக்கவா? ஏன் இப்படிப் பேசறே!

கறுப்பண்ணன் :—நானு ஒன்னை இன்னிக்கியும் நாளைக்கியுந்தானே பிரிஞ்சிருப்பேன்! அப்பாலே ஓடி வந்துப்புடமாட்டேன்!

காத்தாயி :—ஒனக்கென்ன பயித்தியம் கியித்தியம் புடிச்சிருக்கா என்ன?

கறுப்பண்ணன் :—என்னு குட்டி இப்படிப் பேசறே! ஒன்னைப் பிரியாதுன்னு எனக்கு எம்புட்டு வருத்தமாருக்குத் தெரியுமா?

காத்தாயி :—இந்தா வாயை மூடு! உனக்கு இப்பத்தான் சிறு வயசு திரும்புதாக்கும்! இங்கே நின்னுகினு கன்னு பின்னுன்னு பேசாதே! யார் காதிலாவது விளப்போவுது. நாளியாவுது போயிட்டு வா!

கறுப்பண்ணன்:—எங்காளேக் கண்ணுல்ல நீ? காத்தாயி! எம் மூஞ்சியைப் பாரு! ஒனக்குச் சந்தையிலே என்னு வேணும்? கேளு! வாங்கிகினு வாரேன்! வாளப்பளம் வேணுமா?......ஒனக்கு ஆசையான பொரியுருண்டை வேணுமா?—எது வேணும்னாலும் கேளு!

காத்தாயி: அடியம்மா! இது என்னு ஒனக்கு இன்னிக்கி வயசு திரும்பிக்கிட்டிருக்கு! எனக்கு ஒன்னும் வேணும். போயிட்டு வா! வரும்போது மாட்டுக்கு ஒரு மூட்டை பருத்திக்கொட்டை வாங்கிக்கினு வா! மறந்துடாதே! புண்ணாக்கு மனுவா வித்தாலும் வாங்கிக்கினு வா. நாளியாயிட்டுது. அதோ அடுத்த வீட்டு அண்ணே கூப்பிடுராரு போ!

என்று சொல்லி விட்டுக் கொல்லைப்புறம் போய் விட்டாள். கறுப்பண்ணன் அவளேயே பார்த்துக் கொண்டு நின்றான். அவள் மறைந்ததும் ஏங்கிய உள்ளத்தோடு ஒரு பெருமூச்சு விட்டு வெளியில் வந்தான். அப்பொழுது அவன் உள்ளத் திரையில் தோன்றி மறைந்த காட்சிகள் என்னவோ?

கைம்பெண் கமலா

“போகலாமா?”

“எங்கே?”

“எங்கேயா? வக்கீல் வரதப்பர் வீட்டுக்குத்தான்!”

“ஏன்?”

“ஏனா? வரதப்பர் வீட்டில் வேலைக்கிருந்தானல்லவா, ஒரு மலையாளத்தான், அவன் நேற்றிரவு தன் குடிசையில் கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டு மாண்டு விட்டானாம். நாம் அதைக் கொஞ்சம் பார்க்கவேண்டாமா?”

“ஓ! அப்படியானால் உனக்கு ஒரு வேட்டை இருக்கிறது என்று சொல்! மணி! நானும் உன்னோடுதானே வந்தேன், உனக்கு மாத்திரம் இச்சங்கதி எவ்வாறு தெரிந்தது?”

“நீ காப்பியின் நினைவாகவே வந்தாய். அதனால்தான் நாம் கடற்கரைப் பக்கம் வரும்போது இச்சங்கதியைக் குறித்து இருவர் பேசிக்கொண்டு சென்றதை நீ கவனிக்க முடியாமற் போய்விட்டது. காப்பியின் மயக்கமென்ன சாமானியமானதா? அது போகட்டும். முத்து! இச்சென்னையில் இம்மாதிரியான செய்திகள் வெகு சாதாரணமாயிருக்கின்றன. என்றாலும் பார்த்துவிட்டு வரலாம் என்று நினைக்கிறேன். என்ன சொல்லுகிறாய்?”

“சரி”

உடனே, துப்பறியும் மணியும், டாக்டர் முத்துவும் திருவல்லிக்கேணியிலுள்ள வக்கீல் வரதப்பர் வீட்டுக்குச் சென்றார்கள். அங்குக் கூட்டம் அதிகமாயிருந்தது.

இருவரும் உள்ளே போய் மலையாள அச்சுதன் தூக்குண்டு தொங்குவதைக் கண்டார்கள். இவர்களைப் பார்த்ததும் அங்கிருந்தவர்களில் பலர் "துப்பறிகிறவர்" "துப்பறிகிறவர்" என்று ஒருவருக்கொருவர் குசு குசுவெனப் பேசிக்கொண்டார்கள்.

முத்துவும் மணியும் அவ்விடத்தைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது ஒருவர் மணியிடம் நெருங்கி இரகசியமாக "ஐயா, இவன் இறந்ததைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? இவன் இறந்ததற்கு என்ன காரணம்? உங்களுக்கு ஏதாவது தெரிகிறதா?" என்று கேட்டார்கள்.

"இவன் இறந்த சங்கதிதான் சிறு குழந்தையும் அறியும்படியிருக்கிறதே. 'மானமிழந்தபின் வாழாமை நல்லது' என்ற பெரியோர்கள் மொழிக்கிணங்க இவன் நடந்துகொண்டுவிட்டான். அந்தமட்டில் இவன் உத்தமனே. நாங்கள் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தோமே யல்லாமல் வேறு எதற்காகவும் அல்ல. இது ஒரு கொலைச் செய்தியாயிருந்து கொலையாளி மறைந்திருப்பானானால் ஏதோ பார்க்கலாம். இதிலென்ன இருக்கிறது?" என்று மணி வெகு அலட்சியமாகச் சொல்லிவிட்டு மலையாளத்தான் பிணத்தைப் பரிசோதிக்கச் சென்றார். அதற்குள் பிணத்தைக் கீழே படுக்கப்போட்டார்கள் போலீஸ் ஆட்கள்.

மலையாளத்தான் உடம்பில் எவ்வித காயமும் இல்லை. கழுத்து மாத்திரம் தடித்திருந்தது. மூக்கில் இரத்தம் வந்து காய்ந்துபோயிருந்ததும் தெரிந்தது. மணி பிணத்தைப் பரிசோதித்ததும் எழுந்து நின்று கீழே குனிந்த வண்ணம் பார்த்துக்கொண்டே வரதப்பர் வீட்டினுள் சென்று, ஓரறையின் வாசற்படியண்டை நின்று நிமிர்ந்து பார்த்தார். அவ்வறையின் கதவு மூடியிருந்தது.

அதைத் திறந்துகொண்டு உள்ளே போய் எதையோ கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார். முத்துவுக்கு அவர் செய்கை வியப்பாயிருந்தமையால் அதிசயத்துடன் அவர் பின்னாலேயே சென்று நின்றார்.

அச்சமயம் விதவையான ஒரு பெண் ஏதோ காரியமாய் அங்கு வந்த இவர்களைக்கண்டு திடுக்கிட்டு நின்றாள். மணி அவளைப் பார்த்ததும் மிகவும் மரியாதையுடன் "அம்மா! நாங்கள் யாரோ என்று நீங்கள் திகைக்க வேண்டாம். மலையாளத்தான் மாண்டுள்ளதைப் பார்க்க வந்தோம். இவ்வீடு அழகாயிருந்தபடியால் பார்க்கலா மென்று இங்கு வந்தோம். இவ்வீடு உங்களுடையது என்று நினைக்கிறேன். உத்திரவில்லாமல் உள்ளே நுழைந்ததற்கு மன்னிக்கவும்" என்றார்.

"பேஷ்! நல்ல ஒழுங்கான மனிதர்களையா நீங்கள்! திறந்த வீட்டில் நாய் நுழைவதுபோல் புகுந்துவிட்டு மன்னிப்புக் கேட்பது நல்ல சாமர்த்தியம்! யோக்கியர்கள் கேட்டுக்கொண்டல்லவா உள்ளே நுழையவேண்டும்? எங்கள் வேலைக்காரன் இறந்துவிட்டானேயென்று நாங்கள் வருந்திக் கொண்டிருக்கும்பொழுது உங்களுக்கு வேடிக்கையா? நன்றாயிருக்கிறது! போங்கள்! போங்கள்!! நீங்கள் பார்த்தமட்டில் வீடு நன்றாகத்தான் இருக்கிறது" என்று கடுகடுவென்று பேசி அவர்களை வெளிப்படுத்தி, அவ் வறையைப் படேரென்று மூடிவிட்டு வெறித்த பார்வையுடன் இருவரையும் ஒருமுறை பார்த்துவிட்டு, வெகு வேகமாய்ப் போய்விட்டாள். முத்துவும், மணியும் அவ்விடத்தை விட்டகன்றார்கள்.

* * *

"முத்து! என்ன நினைக்கிறாய்? அந்தப் பெண்மீது உனக்குக் கோபம்போலிருக்கிறது!" என்று சொல்லி, மணி வயிறு குலுங்க நகைத்தார்.

"அப்படியென்றால் உனக்குக் கோபம் இல்லை போலிருக்கிறது! 'இறந்த வீட்டில் நாய் நுழைவதுபோல் புகுந்துவிட்டு மன்னிப்புக் கேட்பது நல்ல சாமர்த்தியம்' என்று அவள் சொன்னது எனக்கு மிகுந்த அவமானமாய்ப் போய்விட்டது. உன்னோடு ஏன் வந்தோம் என்றுகூட நினைத்தேன். நீ என்னவென்றால் சிரிக்கிறாய்! உனக்குக் கொஞ்சங்கூட உணர்ச்சியில்லையப்பா!" என்று சலிப்போடு புகன்றார் முத்து.

மணி:—இது ஒரு வேடிக்கை! இம்மாதிரி வேடிக்கைகளில் எனக்கு மிகவும் ஆசை. இருக்கட்டும். மலையாளத்தான் பிணத்தைப் பார்த்தாயே, உன் மனத்தில் பட்ட கருத்தென்ன?

முத்து:—என் மனத்தில் படுவதென்ன? வக்கீல் வரதப்பர் மலையாளத்தானைத் தன் வீட்டில் வேலைக்கு வைத்திருந்தார். அவன் தனி மனிதன். ஆதலால் அவன் அவர் வீட்டுத் தோட்டத்திலேயே குடியிருந்திருக்கிறான். மலையாள அச்சுதன் நல்லவன்; ஒழுங்கானவன். வரதப்பருக்கு அச்சுதன் பேரில் அன்பு அதிகம் போலிருக்கிறது. அவன் இறந்துவிட்டதைக் குறித்துக் கண்ணீர்விட்டுக் கலங்கியதை என் கண்ணாலேயே கண்டேன். வரதப்பர் மகள் கைம்பெண்ணான கமலா, 'என் ஜடைவில்லையைக் காணோம், அறையில் வைத்திருந்தேன், அச்சுதன்தான் அறைக்குள் வந்தான், அவனைத் தவிர வேறு யாரும் எடுத்திருக்கமாட்டார்கள்' என்று திட்டமாய்ச் சொன்னதைக் கேட்டுக்கொண்டு, வரதப்பர் அச்சுதனைச் சிறிது கடிந்து கேட்டிருக்கிறார். அதைப் பொறுக்கமாட்டாமல் கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டு மாண்டவன், எத்தனைய மானமுள்ளவனாயிருக்கவேண்டும்!

அதனுல்தான் வரதப்பர் மிகவும் வருந்துகிருர்! "இவனைப் போல் ஒழுங்கான வேலைக்காரன் எங்கே கிடைப்பான்?" என்று அவர் இரங்கிக்கூறியபோது எனக்குக்கூடத்தான் வருத்தமாயிருந்தது. இதைத்தவிர, நானறிந்தது ஒன்றுமில்லை. நீ என்னவோ மோப்பம் பிடித்துக்கொண்டு வரதப்பர் வீட்டுக்குள் நுழைந்து கமலாவிடம் வசைமொழி பெற்றுவந்தாயே, அதிலிருந்து நீ ஏதேனும் புதிய சங்கதியைக் கண்டுபிடித்திருக்கிருயா?

மணி :—உன் கருத்து என்னவென்று கேட்டால், ஏதேதோ கதைகளையளந்துவிட்டுக் கடைசியில் என்னையே திருப்பிக்கொண்டாயே! போகட்டும். நீயும் எல்லோரையும் போல் மலையாளத்தான் தானாகத் தூக்குப்போட்டுக் கொண்டான் என்றுதான் நினைக்கிருயோ!

முத்து :—(ஆச்சரியத்துடன்) பின் என்ன? நீ அவ்வாறு நினைக்கவில்லையா? என்ன மணி! நீ கூறுவது விந்தையாயிருக்கிறதே!

மணி :—முத்து! இது ஒரு கொலை! தற்கொலையன்று! கொலையாளி இன்னுரென்று உன்னுல் கண்டுபிடிக்கக்கூடுமா?

முத்து :—கொலையா? கொலையாளியைக் கண்டுபிடிப்பதா? வெகு நன்ருயிருக்கிறதே! மணி! நீ சொல்லுவது எனக்குப் புதுமையாயிருக்கிறது. உன்னைப்போல ஒரு செய்தியில் நுழைந்து பார்க்கும் வல்லமை என்னிடம் இல்லை. கொலையாளியையாவது, நான் கண்டு பிடிப்பதாவது! "மொட்டைத்தாதன் குட்டையில் விழுந்தான்" என்றிருக்கிறது சங்கதி. வேண்டுமானுல் உன்னைக் கொலையாளி என்று சொல்லிவிடத் தயார்! ஏனென்ருல், எல்லாச் சங்கதிகளையும் முன்னமேயே ஊகித்து அறிந்துகொண்டு என்னைக் கொலை செய்கிருயல்லவா? மணி!

இப்பொழுது எவ்வளவு அறிந்திருக்கிறாய்? எனக்குச் சொல்!

மணி :—முத்து! அவசரப்படாதே! இப்பொழுது காலை பத்து மணியல்லவா! நாளைக்காலை இதே நேரத்திற்குள் சகல சங்கதிகளும் வெட்ட வெளிச்சமாய் விளங்கிவிடும். அதுவரையில் பொறு. நோயாளிகள் யாரோ டாக்டரைக் காணுமென்று தேடுகிறார்கள். நீ உன் வைத்தியசாலைக்குச் செல். எனக்கு இன்று முழுமையும் வேலைகள் இருக்கின்றன. அவைகளை முடித்துக்கொண்டு நான் வர எந்நேரமாகுமென்று இப்பொழுது என்னால் சொல்ல முடியாது. ஆதலால் எனது வரவை இரவு 10 மணி வரையிலும் பார்! பிறகு நீ உன் படுக்கைக்குப் போகலாம்-என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு வெளியே போனார் துப்பறியும் மணி.

முத்து இரவு 10 மணிக்கு மேலும் மணியின் வரவை எதிர்பார்த்து வராமையால் தூங்கிவிட்டார்.

* * *

"என்ன மணீ! இன்னும் தூங்குகிறாயே! மணி எட்டடிக்கப்போகிறது! இரவு நெடுநேரம் கண்விழித்தாயோ?"

"ஆ! யார்? முத்துவா? அடடா! நீண்டநேரம் தூங்கிவிட்டேன் போலிருக்கிறதே! இராத்திரி நான் படுக்கும்பொழுது மணி இரண்டு. அதனாலேயே இவ்வளவு நேரம் தூங்கிவிட்டேன்.

"கொலையாளியைக் கண்டு பிடித்துவிட்டாயா? அதை முதலில் சொல்! கொலையாளி யார்?"

"முத்து! அவசரமில்லாமல் இக்கடிதத்தைப் பார்"

"கடிதமா? யாருக்கு? உனக்கா? யார் எழுதினது?" — என்று திகைத்துப்போய்க் கடிதத்தைப் பார்த்தார் முத்து.

எச்சரிக்கைக் கடிதம்

"மணி! நீ துப்பறியும் வீரன் என்று எனக்குத் தெரியும். மலையாளத்தான் கொலையில் நீ தலையிட்டிருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. அறிவாளியாயிருந்தால் இக்கடிதத்தைப் பார்த்ததும் உன் முயற்சியை நிறுத்திக் கொள்ளவேண்டும். அவ்வாறு செய்வாயானால் உனக்கு நல்ல வெகுமதி கிடைக்கும். இன்றேல் நீ இறக்க வேண்டியதே. இது உனக்குச் சிறந்த எச்சரிக்கை என்று நினைக்கிறேன். உன்னுடைய நலனைக்கோரி எழுதும் இந்த எச்சரிக்கைக்குத் தக்க மதிப்புக்கொடுப்பாயென நம்புகிறேன்."

இப்படிக்கு,
"நன்மை நாடுவோன்"

முத்து :—மணீ! இதுவென்ன ஒன்றும் விளங்கவில்லையே! இதை எழுதினது யார்?

மணி :—முத்து! பயப்படாதே! இது வெறும் மிரட்டல்.

முத்து :—மணி! நீ சொல்லும் சங்கதிகள் இருட்டறையில் பார்க்கும் பொருள்களைப்போலிருக்கிறது! இது என்ன மிரட்டல்? கொலையாளியைக் கண்டுபிடித்தாயா? நேற்று முழுவதும் எங்குச் சென்றிருந்தாய்? இவைகளை விளக்கமாய்ச் சொல்!

மணி :—முத்து! இப்பொழுது நான் கொலையாளியைக் கண்டுபிடித்த வழிகளையெல்லாம் விவரிக்காமல் சாரமான சங்கதியை மாத்திரம் சொல்லுகிறேன் கேள்! மலையாள

அச்சுதன் நல்லவன்தான். அதனால்தான் வரதப்பர் அவனைத் தன் தோட்டத்திலேயே குடியிருக்கச் சொல்லியிருக்கிறார். நான் அவ்விடத்திற்குப் போனவுடனேயே பிணத்தின் நிலைமையைப் பரிசோதித்துக் கொலையென்று உறுதி செய்துவிட்டேன். வரதப்பர் மகள் கமலா கைம்பெண் என்பதுதான் உனக்குத் தெரியுமே! பாவம்! அவள் பருவமடைவதற்கு முன்னமேயே தன் கணவனை இழந்து விட்டாளாம். உடனே அவளை வேறொரு ஆடவனுக்கு மணம் செய்திருந்தால், இக்கொலை பாதகத்திற்கும், அவமானத்திற்கும் அவள் ஆளாகவேண்டியிருக்கமாட்டாள். என்ன செய்வது! உடல் இச்சை எல்லோருக்கும் பொது தானே? அச்சுதனும் அழகானவன்; இளைஞன். கமலா தன் இச்சையைத் தணித்துக்கொள்ள அச்சுதனை அழைத்தா ளென்றால் அது தவறாகுமா? ஒழுங்குள்ளவனான அச்சுதன் அவள் கருத்துக்கு இணங்கவில்லை. இப்பொழுது கமலாவுக்கு "உடும்பு வேண்டாம்; கை வந்தால் போதும்" என்றாய்விட்டது. அச்சுதன் இச்சங்கதியைத் தன் தந்தையிடம் சொல்லிவிடுவானோவென்று பயந்தாள். எவ்வாறாவது அச்சுதனை வீட்டை விட்டுத் துரத்திவிட அவள் எண்ணுவது இயல்புதானே? 'ஜடைவில்லையைக் காணோம்; அதை அச்சுதன்தான் எடுத்தான்' என்ற கதையைக் கட்டினாள். வரதப்பர் தன் மகள் மொழிகளை மெய்யென்று நம்பி அச்சுதனை அதட்டிக் கேட்டிருக்கிறார். நிர்ப்பந்தத்தால் கமலாவின் சங்கதியை அச்சுதன் தெரிவிக்க நேர்ந்திருக்கிறது. வரதப்பர் மானமாய் வாழ்பவர். கமலாவின் சங்கதி அவர் மனத்தைத் தொளைத்தது. இதை யாரும் உணராமற் செய்யவேண்டுமென்று நினைத்தார். அதற்கு வழி என்ன? அச்சுதனைக் கொன்றுவிடுவதுதான். இதையே முடிவு கட்டினார். அன்றிரவு அச்சுதன்

எப்பொழுதும்போல் வரதப்பர் வீட்டுக் கொல்லைப்புற அறையில் — அதாவது நாம் நேற்று கமலாவைக் கண்ட அறையில் — படுத்திருந்தான். பன்னிரண்டு மணிக்கு வரதப்பர் மிகவும் பழக்கமான தன் குதிரை வண்டிக்காரனுடன் சென்று அச்சுதன் கழுத்தையும் மூக்கையும் அமுக்கிக்கொன்று, அவனை அவன் குடிசைக்குத் தூக்கிக் கொண்டுபோய் அவனே தூக்குப் போட்டுக்கொண்டதுபோல ஒரு நாடகம் ஜோடித்துவிட்டார். இதுதான் சங்கதி. வரதப்பர்தான் எனக்கு மிரட்டல் கடிதம் எழுதியவர். நேற்றிரவு பதினேரு மணிக்குக் குதிரை வண்டிக்கார கோவிந்தனை அவன் வீட்டில் போய் எழுப்பி, அவன் எதிரே கைத்துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டு, 'சத்தம் போட்டால் தொலைந்தாய்! நான் துப்பறிகிறவன். அச்சுதன் கொலையைப்பற்றி உனக்குத் தெரிந்ததைச் சொன்னால் பிழைத்தாய்" என்று மிரட்டவும், அவன் கலங்கிப்போய் எல்லாவற்றையும் சொல்லிவிட்டான். கைம்பெண்ணால் ஒரு கொலை! வா! சிற்றுண்டி சாப்பிடப் போகலாம். பிறகு விவரமாய்ச் சொல்லுகிறேன் என்று கூப்பிட்டார். அவரோடு புறப்பட்டார் முத்துவும்.

தாசியின் காதல்

நான் திருவல்லிக்கேணிக் கடற்கரையை அடைந்த பொழுது மாலை மணி ஐந்திருக்கும். கதிரவன் தன் செந்நிறக் கதிர்களை உலகிலுள்ள எல்லாப் பொருள்கள் மீதும் வாரி வீசித் தன் வண்ணமாகத் திகழச்செய்து, மேற்றிசையில் மறைவதற்கு விரைந்துகொண்டிருந்தான். ஆண், பெண், இளைஞர், முதியோர் ஆகிய பலதிற மக்கள் ஆங்காங்கு அமர்ந்து பேசிக்கொண்டும், உலாவிக்கொண்டுமிருந்தார்கள். அப்பொழுது நீலக்கடலின் காட்சி கண்ணையும் மனத்தையும் கவர்வதாயிருந்தது. ஆயினும் என் உள்ளமெல்லாம் அன்று ஆராய்ந்துகொண்டிருந்த சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் செந்தமிழ்க் காப்பியங்களிலேயே ஆழ்ந்திருந்தது.

நான் பாரதியாரின் பாடல்களைப் பலமுறை படித்திருந்தாலும் சென்ற சில நாட்களில்தான் "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமென்றோர் மணியாரம் படைத்த தமிழ் நாடு" என்ற அடிகளின் ஆழமான கருத்தை நன்குணர்ந்து வியந்து பாராட்டினேன்.

"மேற்கூறிய காப்பியங்களில் மாதவியின் தூய மனப்பான்மையும், கற்பும், கோவலனிடத்தில் அவள் கொண்டிருந்த மாசற்ற அன்பும், கோவலன் கொலையுண்டிறந்ததும், அவள் இன்ப வாழ்க்கையை வெறுத்துத் துறவியானதும், தான் மட்டுமன்றி, கோவலன் மகளாய்த் தன்னிடத்துப் பிறந்த மணிமேகலையையும் துறவுக்கோலம் அடையச் செய்ததும் ஆகியவைகள் மாதவியை எவ்வளவு உயர்வாக மதிக்கச் செய்கின்றன! ஆனால், மாதவியை உலகம் எப்படி மதிக்கிறது? அவள் கற்பின் திறத்தை உள்ளவாறு மதிப்பிடுகிறதா? கணிகையர் குலத்தில் பிறந்தவள் - தாசி

என்றுதானே அவளை அலட்சியம் செய்கிறது? அதனால் இக்காலத்தில் நடைபெறும் நாடகம், பேசும் படம் ஆகியவை மாதவியை எவ்வளவு கீழ்த்தரமாய் மதிக்கும்படி செய்து விட்டன! இளங்கோவடிகள் மாதவியை எவ்வளவு உயர்தரமாய்ப் படைத்திருக்கிறார்! இவ்வுண்மையை எத்தனை பேர் அறிவார்கள்?"

இங்ஙனம் எண்ணிக்கொண்டே சிறிது நேரம் உலவி விட்டு ஓரிடத்தில் வெண்மணலில் உட்கார்ந்தேன். அப்பொழுது "என்னடா சொல்லாமல்கூட வந்துவிட்டாய்?" என்று என் பின்புறமிருந்து ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். என் நண்பன் நாராயணன் வந்து கொண்டிருந்தான். "நாராயணா! நல்ல வேளையாக நீ வந்து சேர்ந்தாய்! உட்கார்! என்னவோ நினைவாக உன்னைப் பார்க்காமல்கூட வந்துவிட்டேன்" என்றேன். நாராயணன் என்னருகில் உட்கார்ந்தான்.

நாராயணன் :—நல்ல வேளையாய் நான் வந்தேன் என்றால், எனக்கு ஒன்றும் புரியவில்லையே?

நான் :—பயந்து விடாதே! இன்று முழுவதும் இளங்கோவடிகள் இயற்றியுள்ள சிலப்பதிகாரத்தைப் படித்துக்கொண்டிருந்தேன். அதைப்பற்றி. உன்னிடம் பேசலாமென்றுதான் நான் அவ்வாறு சொன்னேன். 'மாதவியின் காதல்' என் மனத்தைக் கவர்ந்தது. அதை ஒரு சிறு கதையாக எழுதிவிடலாமென்று தீர்மானித்திருக்கிறேன்.

நாராயணன் :—மாதவியின் காதல்! கதையில்தானே? நடைமுறையில் இல்லையே? தாசியாகிய மாதவியின் காதல் சிலப்பதிகாரத்தில்தான் இருக்கிறது!

நான் :—நாராயணா! தாசியென்றால் உன்னைப்போலவே உலகத்திலுள்ளோர் நினைக்கிறார்கள், பேசுகிறார்கள் என்பது உண்மைதான். அதற்கேற்றபடியே அவர்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள் என்பதும் உண்மைதான். ஆனால், எல்லோருமே நீ நினைப்பதுபோலவே இருப்பார்களென்று நான் கருதவில்லை. மாதவிபோன்ற மங்கையும் அவர்களில் இருக்கக்கூடும். என்ன சொல்கிறாய்?

நாராயணன் :—உன் கருத்தை நான் மறுக்கவில்லை. ஆனால் இது மிக அருமையென்றே நினைக்கிறேன். சில மாதங்களுக்கு முன் அடுத்த வீட்டுக்காரர் சொன்ன கதையொன்றைக் கூறுகிறேன் கேள். தாசியென்போரின் தன்மை அதனால் நன்றாய்த் தெரியும். சொல்லட்டுமா?

நான் :—சொல். பிறகு மாதவியின் தன்மையை நான் சொல்கிறேன்.

நாராயணன் :—சரி. நான் சொல்லப்போவது பொய்க்கதையன்று; உண்மையில் நடந்ததே. தங்கசாலைத் தெருவில் மோகனாம்பாள் என்று ஒரு தாசி இருந்தாள். அவள் சொந்த ஊர் திருவாரூர். சென்னையிலிருந்து திருவாரூருக்குப்போயிருந்த ஒரு முதலியார் — அவர் பெரிய பணக்காரர் — மோகனாம்பாளைக் கண்டு மோகித்தார். ஆயிரக்கணக்கான ரூபாய்களைத் தண்ணீர்போலச் செலவழித்தார். மோகனாம்பாள் பணத்தில் மோகம் கொண்டாள். முதலியாரை விட்டுப் பிரிந்தால் உயிரை விட்டுவிடுவதாகச் சொல்லி நன்றாய் நடித்தாள். முதலியார் அவள் வலையில் அகப்பட்டு அறிவு மயங்கினார். ஆதலால் அவளைச் சென்னைக்கு அழைத்துவந்து தங்கசாலைத்தெருவில் ஒரு மாளிகையை வாங்கி அதில் இருக்கச்செய்தார். இரண்டு வருடங்கள் சென்றன. முதலியார் கையில் கொஞ்சம் பண ஆட்டம் குறைந்தது.

நான் :—மோகனும்பாள் வேறொரு காதலனைத் தேடிக் கொண்டாள். அவன் ஒரு செல்வச் சீமான்! அப்படித்தானே!

நாராயணன் :—பின் எப்படி? அந்தச் சீமான் ஒரு செட்டியார். முதலியார் இருக்கும்பொழுதே செட்டியார் மோட்டாரில் வந்து இறங்குவார். அது முதலியாருக்கு என்னவோபோலிருந்ததுபோலும்! ஆகலால், ஒருநாள் அவர் மோகனும்பாளிடம் தனிமையில் "அவர் யார்?" என்று கேட்டதற்கு "எனக்குத் தெரிந்தவர்" என்று பதில் சொன்னாளாம். அப்பதில் ஏனோ முதலியாருக்குக் கோபத்தை உண்டாக்கிவிட்டது. "உன் சங்கதி எனக்குத் தெரியாதென்று எண்ணிக்கொண்டாய்? இவன் இனிமேல் இங்கு வரக்கூடாது. தெரிந்ததா?" என்று முகம் சிவக்க உரத்துப் பேசினாராம். "அவர் வரத்தான் செய்வார். உங்களுக்கு விருப்பமில்லாவிட்டால் நீங்கள் வரவேண்டாம்" என்று மோகனும்பாள் மிகவும் கண்டிப்பாகச் சொன்னாளாம். முதலியார் இதை எதிர்பார்க்கவில்லை. ஆகவே, திடுக்கிட்டுப் போய்விட்டார். கோபம் பொங்கியெழுந்தது. தன் ஆத்திரம் தீர அவள் கூந்தலைப் பிடித்து இழுத்து முதுகில் ஒரு குத்துக் குத்தி உதைத்துக் கீழே தள்ளிவிட்டு வந்து விட்டாராம். முதலியார் அடித்ததைப்பற்றி அவள் கவலைப்படவில்லை. அவர் போய்விட்டதைப்பற்றியே மகிழ்ந்தாளாம். பிறகு செட்டியாரோடு கூடி இரண்டு மூன்று வருடங்கள் இருந்தாளாம். அதற்குப் பிறகு ஐந்தாறுபேர் காதலர்களானார்களாம். கடைசியில் ஒருவன் மோகனும்பாளுடன் சல்லாபமாய் இருக்கும்போது பழைய காதலன் ஒருவன் வர அவனுக்கும் உள்ளேயிருந்தவனுக்கும் சண்டையேற்பட்டது. மோகனும்பாளும் அவனுக்கு உடந்தையாக இருந்து வந்தவனை இழிவாக மதித்துப் பேசினாள். அதனால் வந்தவன் கோபம் கொதித்துக்

கத்தியால் இருவரையும் குத்திக் கொலை செய்துவிட்டுத் தலைமறைவாய் ஓடிவிட்டானும். தாசியின் காதல் எப்படியிருக்கிறது?

நான்:—உண்மைதான்: இத்தகையோர் பலர் இருக்கிறார்கள். ஒருவனிடத்திலாவது உள்ளன்பு இல்லையென்றால் இந்த மோகனும்பாளுடைய வாழ்க்கை எப்படித்தான் இனிமையாயிருந்திருக்கும்? வெறும் பணத்தால் என்ன இன்பம் உண்டாய்விடுமென்று இவள் நினைத்தாள்! ஐயோ! பாவம்! கொடிய பாலை வனத்தில் நடந்து போகிறவனுக்கும் காதல் சுவையற்ற இவள் வாழ்க்கைக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? காதலின் சுவையை ஒரு சிறிதாவது சுவைத்திருந்தால், இப்படி வறண்டுபோன உள்ளத்தோடு வாழ்ந்திருப்பாளா? நாள் முழுதும் வேலை செய்து நாலணு சம்பாதிக்கும் ஏழைகளான ஒரு ஆணும் பெண்ணும் கஞ்சியைக் குடித்துவிட்டு உள்ளன்போடு உரையாடி அனுபவிக்கும் இன்பத்தைப்போல் இவள், தான் வஞ்சித்துத் தேடிய பொருளால் அடைந்திருக்க முடியுமா? என்ன அறியாமை!

நாராயணன்:—என்னடா பெரிய பிரசங்க மழை பொழியத் தொடங்கிவிட்டாய்! காதலாவது! உள்ளன்பாவது! பைத்தியந்தான்! தாசிகளிடத்திலா! சரி! சரி! இப்பொழுது புரிந்தது! 'தாசியின் காதல்' என்ற கதைக்கு ஏற்ற சம்பவம் கிடைக்குமென்று எண்ணி ஏமாறிவிட்டாய் போலிருக்கிறது. அன்பு உலர்ந்த — தப்பு, தப்பு — அன்பு இல்லாத உள்ளம் படைத்தவள் எவளோ அவள்தாண்டா தாசி! மோகனும்பாள் அசல் தாசி!

இச்சமயத்தில் சிறிது தூரத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த ஒரு கிழவன் எழுந்து எங்கள் பக்கம் வந்து,

உட்கார்ந்தான். நாங்கள் வியப்போடு அவனை உற்றுப் பார்த்தோம். அவனுக்குச் சுமார் அறுபது வயதிருக்கும். சாதாரண ஆடை, சட்டை; நீண்ட தாடி, மீசை; எல்லாம் ஒரே வெள்ளை! குழி விழுந்த கண்கள்; தொங்கும் புருவங்கள்; மடிப்பு விழுந்த நெற்றி. இத்தோற்றத்தை மிகுந்த ஆச்சரியத்தோடு நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே, "உங்கள் பேச்சுக்கு நடுவில் நான் வந்ததற்காக என்னை மன்னிக்கவேண்டும். உங்கள் உரையாடலின் ஒவ்வொரு எழுத்தும் என் காதில் விழுந்தது. அது என்னை இங்கு வரும்படி செய்துவிட்டது. ஒரு தாசியின் சம்பந்தமாய் நீங்கள் பேசினீர்கள்! "காதலையறியாதவளே தாசி" அல்லது "தாசியிடம் காதல் இல்லை" என்பதல்லவா உங்கள் கருத்து? இதற்கு மாறாக நடந்த ஒரு பழைய கதையைச் சொல்லுகிறேன். கேட்கிறீர்களா?" என்று சொல்லிவிட்டு எங்கள் இருவர் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான்.

கிழவன் மொழிகளிலிருந்து அவன் ஒரு உண்மைச் சம்பவத்தையே சொல்லப்போகிறான் என்று தெரிந்து கொண்டேன். அதுவும் தாசியின் காதற் கதையாகவே இருக்குமென்றும் தோன்றவே எனக்குக் கேட்கவேண்டு மென்ற விருப்பம் தோன்றியது. நான் நாராயணனைப் பார்த்தேன். அவன் கிழவனைப் பார்த்தான். கிழவன் குறிப்பறிந்து கதையைத் தொடங்கினான்.

கிழவன் :—சில வருடங்களுக்கு முன் மங்களபுரி ஜமீன்தார் இச்சென்னையில் பங்களா கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தார். பெரும்பாலும் அவர் மங்களபுரிக்குப் போவதில்லை. ஜமீன் காரியங்களை அவருடைய காரியஸ்தரே கவனித்து வந்தார். ஜமீன்தாருக்குச் சங்கீதத்தில் மிகுந்த பைத்தியம்.

ஆகையால் சங்கீத வித்துவான்கள் எப்பொழுதும் அவரைச் சுற்றிக்கொண்டேயிருப்பார்கள்; வேண்டிய பரிசுகளை வாங்கிக்கொண்டு போவார்கள். ஒரு நாள் ஒரு தாசி—அவள் பெயர் சுந்தரி என்று சொல்லுவோமே—தன் சங்கீதத் திறமையைக் காட்டிப் பரிசுபெற வந்தாள். அவளுக்குப் பதினெட்டு வயதிருக்கும். நல்ல அழகுடையவள். எப்படியோ அவளுக்கும் ஜமீன்தாருக்கும் நெருங்கிய பழக்கம் ஏற்பட்டுவிட்டது. ஆகையால், ஜமீன்தார் சுந்தரியைத் தன் பங்களாவிலேயே வைத்துக்கொண்டார்.

நான் :—ஜமீன்தாருக்கு மனைவி இல்லையா?

கிழவன் :—இருந்தாள். ஆனால் ஜமீன்தாருக்கு அவளிடம் அதிக அன்பு இல்லை. அதாவது காதல் இல்லை. அதற்குக் காரணம் அவள் நல்ல அறிவுடையவளாயில்லாதது தான். அவள் தந்தை ஒரு பெரிய மிட்டாதார். ஆதலால் அவர் பெண்ணையே இந்த ஜமீன்தாருக்கு—விருப்பமில்லா திருந்தும் — இவர் தந்தை திருமணம் செய்துவைத்தார். செல்வர்கள் செல்வத்தைத்தானே நினைக்கிறார்கள்! மணமக்களின் தகுதியை எண்ணுகிறார்களா? அவளிடம் ஜமீன்தாருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அவ்வளவு தான். அதன்பின் ஜமீன்தார் தமது மனைவியிடம் பற்றுதலின்றியே வாழ்ந்துவந்தார். இந்நிலையில் சுந்தரி வந்துசேர்ந்தாள். அவர் சுந்தரியோடு கூடி வாழ்வதை யறிந்து அவர் மனைவி பொறாமைகொண்டாள். பொறாமைத் தீ அவள் உடலை உண்ணவாரம்பித்தது. நாளுக்கு நாள் உடல் மெலியலானாள். ஜமீன்தார் அடிக்கடி நல்ல மொழிகளைச் சொல்லிப் பார்த்தார். அவள் செவியில் ஏறவில்லை. மனம் பிடிக்காதபோது எப்படிக் கேட்பாள்? எவ்வளவோ சிகிச்சைக்கும் குணப்படாமல் அவள் இறந்தாள்.

நான் :—பாவம்! அவள் இறந்ததற்கு ஜமீன்தார்தானே காரணம்? அவர் அவள் புத்தியைத் தன் வழியில் திருப்பியிருக்கலாமல்லவா?

கிழவன் :—இந்தவிடத்தில் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஜமீன்தாருக்குத் தன் மனைவியிடம் அடியோடு அன்பில்லையென்று நீங்கள் நினைத்துவிடக் கூடாது. ஆனால் அது காதலன்று. காதலென்பது ஆண் பெண் இருவர் கருத்து ஒருமித்து உண்டாவது. சிறிது நேரத்திற்கு முன் நீங்கள் தெரிவித்த மாதவிக்கும் கோவலனுக்கும் இசை காரணமாக மனம் ஒருமித்தே இருவரும் காதலால் பிணைப்புண்டார்கள் என்பதை உணர்ந்திருப்பீர்களென்று நம்புகிறேன். சில பெண்களைத் திருத்தி விடலாம். பேதமையும் பிடிவாதமும் கொண்ட பெண்களைத் திருத்துவது எளிய காரியமென்று எண்ணிவிட வேண்டாம்.

நான் :—கண்ணகியின் நிலைமையே ஜமீன்தார் மனைவிக்கும் ஏற்பட்டது. ஆனால் கண்ணகி பொறுமையைக் கடைப்பிடித்து உயிரோடிருந்து கணவனை மீண்டும் அடைந்தாள். ஜமீன்தார் மனைவி பொறுமைகொண்டு இறந்தாள் என்கிறீர்கள்!

கிழவன் :—எல்லாம் விதிப்படிதான் நடக்கும். கதையைத் தொடர்வோம். ஜமீன்தாரோடு சுந்தரி இருப்பது அவள் தாய் அம்புஜத்திற்குப் பிடிக்கவில்லை. காரணம், அவர் அதிகப் பணம் கொடுக்கவில்லையென்பதுதான். ஆதலால், ஜமீன்தாரை விட்டு அவளை அழைத்துவர முயன்றாள். அப்பொழுதுதான் சுந்தரியின் உண்மையான மனநிலையை அவளால் உணர்ந்துகொள்ள முடிந்தது. ஜமீன்தாரை விட்டுச் சுந்தரியை அழைத்துவர முடியாது என்பதைக் கண்டதும் திடுக்கிட்டாள். ஜமீன்தாருக்கு இது

வியப்பையளிக்கவில்லையென்றாலும் ஒருவகையான திகைப்பையுண்டாக்கிறது. சுந்தரியின் பற்று அவரை இறுகப் பிணித்தது.

நான் :—சுந்தரி ஜமீன்தாரிடத்தில் காதல்கொண்டு விட்டாள் என்பதுதானே உங்கள் கருத்து?

"ஆமாம்" என்பதற்கு அறிகுறியாகக் கிழவன் மெல்லத் தலையை அசைத்தான். நாங்கள் ஒருவரையொருர் வியப்போடு பார்த்துக்கொண்டோம். கதையை நன்றாய்க் கேட்கவேண்டுமென்று ஆவல் தட்டியது.

கிழவன் :—ஒரு தாசி ஒருவன்மேல் காதல்கொண்டாள் என்பதில் நீங்கள் வியப்படைகிறீர்கள் அல்லவா? நல்லது. இன்னும் கேளுங்கள். உண்மையில் ஜமீன்தாரும் சுந்தரியிடம் காதல்கொண்டிருந்தார். அவளை விட்டுப் பிரிந்தால் அவர் மனம் பெரிதும் வருந்தும். ஆதலால், அவர் அவளோடு கூடியிருப்பதையே இன்பலோக வாழ்க்கையென எண்ணிவந்தார். உங்களுக்கு ஜமீன்தார் செயல் அருவருப்பானதாகவும் அறிவில்லாததாகவும் காணப்படலாம். இம்மாதிரி எண்ணிய அவருடைய நண்பர்களிற் பலர் ஜமீன்தாருக்குப் புத்தி சொன்னதுமுண்டு. ஆனால், உண்மையான காதலின் நலத்தையுணர்ந்த ஜமீன்தார் இம்மாதிரியான சொற்களைப் பொருட்படுத்தவில்லை. இந்த விடத்தில் நீங்கள் ஒன்றை உணரவேண்டும். ஜமீன்தார் சுந்தரியின் உடலழகில் ஈடுபடவில்லை; உள்ளத்தின் அழகில் ஒன்றாய்விட்டார். அவளைக் காமப் பொருளாகக் கருதவில்லை; காதலின் சுவையென்று கண்டார். சுந்தரியும் அவ்வாறே. மனங்கலந்த காதலர் வாழ்க்கையில் காணும் இன்பத்திலும் சிறந்தது இவ்வுலகத்தில் உண்டா? எங்கேயோ பேரின்பம்—மோட்ச இன்பம்—இருக்கிறது என்கிறார்களே, அது மாசற்ற காதலிலேயே இருக்கிறது என்றால், அது தவறாகுமா?

கிழவன் ஆவேசம் கொண்டவன்போல் இவ்வாறு சொல்லிவிட்டு எங்கள் இருவர் முகத்தையும் உற்று நோக்கினான். நாங்கள் வாய் திறவாமல் கதை கேட்பதில் மிக்க ஊக்கம் காட்டினோம்.

கிழவன் :—நாழிகை ஆய்விட்டது. கதையை விரைவில் முடித்துவிடுகிறேன். ஜமீன்தார் ஏராளமாய்ச் செலவு செய்துவந்ததால் துரைத்தனத்தாருக்குச் செலுத்த வேண்டிய பெருந்தொகை செலுத்தப்படாமல் நின்று கொண்டேவந்தது. வருடந்தோறும் இத்தொகை வளர்ந்து கொண்டேவந்ததால் இரண்டொரு முறை எச்சரிக்கை செய்து பார்த்துவிட்டு முடிவில் ஜமீன்தாருக்கிருந்த உரிமைகளையெல்லாம் துரைத்தனத்தார் பிடுங்கிக் கொண்டார்கள். ஆனால், ஜமீன்தாரின் செலவுக்கென்று மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை அனுப்ப ஏற்பாடு செய்தார்கள். ஜமீன்தார் இதனால் மனம் வருந்தவில்லை; மகிழ்ச்சியே அடைந்தார். காரணம் சொல்ல வேண்டியதில்லையல்லவா? ஜமீன் உரிமைதான் அவரை விட்டதேயொழிய சங்கீத வித்துவான்களின் கூட்டம் அவரை விடவில்லை. ஜமீன்தார் வழக்கம்போல் பரிசுகள் கொடுப்பதையும் நிறுத்தவில்லை. அதனால் அவருக்கு வரும் பணம் இரண்டு நாட்களுக்குக்கூடப் போதவில்லை. ஆதலால் அவர் தன் பங்களாவை விற்றார்; சுந்தரியின் வீட்டோடு வந்து சேர்ந்தார். நாளுக்கு நாள் சுந்தரியின் செல்வம் குறையவாரம்பித்தது. கடன்களும் ஏற்பட்டன. இப்போது அம்புஜம் இறந்தாள்.

நாராயணன் :—சுந்தரி ஜமீன்தாருக்கு முழுமனதோடு தான் பணம் கொடுத்தாளோ?

கிழவன் :—சந்தேகமென்ன? ஜமீன்தார் சிலவேளைகளில் செலவிற்கில்லாமல் சிந்தனையில் ஆழ்ந்துவிடுவார்.

அந்தச் சமயத்திலெல்லாம் சுந்தரி குறிப்பறிந்து தேவையான பணத்தை வலியக் கொடுப்பாள். நாலைந்து வருடங்கள் செல்லுமுன் சுந்தரியின் செல்வங்கள் யாவும் மறைந்து போயின. வீட்டையும் விற்றுவிட்டு வேறிடம் சென்று வாழ்ந்தார்கள். கடன்காரர்கள் ஜமீன்தார்மீது வழக்குத் தொடுத்தார்கள். ஒவ்வொரு கடன்காரருக்கும் சுந்தரி தன் விலையுயர்ந்த நகைகளை விற்றுக் கொடுத்தாள். இதற்கிடையில் ஜமீன்தாரின் மகன் வயதடைந்தபடியால், துரைத்தனத்தார் அவனை ஜமீன்தாரராக்கினார்கள். அதனால் ஜமீன்தாருக்கும் ஜமீனுக்கும் சம்பந்தம் அற்றுப்போயிற்று. ஆகவே மாதா மாதம் அவருக்கு வந்துகொண்டிருந்த பணம் நின்றுவிட்டது. சுந்தரியின் உடம்பிலே ஒரு சிறு நகையும் கிடையாது. உயர்ந்த சேலைகளையெல்லாம் ஒன்றுக்குக் காலாக விற்று இருவரும் சாப்பிட்டார்கள். சிறிது காலம் இப்படிச் சென்றது. இந்த நிலை முப்பது ஆண்டுகளுக்குப்பிறகு என்பதை நீங்கள் அறியவேண்டும். ஜமீன்தாரும் சுந்தரியும் உணவுக்கு ஒரு சிறிது பொருளும் இல்லாததைக் கண்டார்கள். ஆனால் அவர்கள் உள்ளத்தில் காதல் குறைய வில்லை. அது முதிர்ந்து கனிந்தது. இந்தக் காதலாலேயே ஜமீன்தார் தன் ஜமீனைத் துறந்தார். சுந்தரி தன் பெருஞ் செல்வத்தை இழந்தாள். ஆனால் இருவரும் தங்கள் இன்பத்தை இழக்கவில்லை.

கிழவன் இம்மொழிகளைக் கூறும்பொழுது அவன் கண்கள் ஒளிவிட்டுப் பிரகாசித்தன. அக்கண்களில் நீர் ததும்புவதும் தெரிந்தது. நாராயணன் என்னைப் பார்த்தான். என் உள்ளம் உணர்ச்சி வேகத்தில் துடி துடித்துக்கொண்டிருந்தது.

கிழவன் :—சுந்தரி நாள்தோறும் மாலையில் ஒரு ஜட்ஜ் வீட்டுக்குச் சென்று அவர் பெண்ணுக்குச் சங்கீதம்

சொல்லித்தருகிறாள். மாதம் எழுபத்தைந்து ரூபாய் சம்பளம் வருகிறது. இந்த ரூபாயில் இருவர் இன்பமாய்க் காலம் கழிக்கலாமல்லவா? ஜமீன்தார் செல்வாக்காயிருந்த பொழுது உயர்ந்த வாசனைப் புகையிலையைத் தாம்பூலத்தோடு போட்டுப் பழகியவர் அதை நிறுத்த அவரால் முடியவில்லை. அதற்கு நாள் ஒன்றுக்கு நான்கணு வேண்டும். நான்கணுவோ இப்பொழுது நான்கு ரூபாய்போலிருக்கிறது. அதனுல் அவர் காலணுப் புகையிலை போதுமென்று நினைத்தால் சுந்தரி கேட்பதில்லை. தான் எவ்வளவு துன்பப் பட்டாலும் தினம் நான்கணுவுக்கு வாசனைப் புகையிலையைத் தானே வாங்கிக்கொண்டு வந்து ஜமீன்தாரைப் போட்டுக் கொள்ளச் சொல்லுவாள். அப்பொழுது ஜமீன்தார் அடையும் ஆனந்தத்திற்கு இணையாக இவ்வுலகில் எதை யேனும் சொல்ல முடியுமா? நீங்கள் பேசிக்கொண்டிருந்த மோகனும்பாளையும் சுந்தரியையும் ஒப்பிட்டுப் பாருங்கள்! நீங்கள் சந்தேகப்படுகிறீர்களல்லவா? ஆமாம், நான்தான் ஜமீன்தார்! சுந்தரி ஜட்ஜ் வீட்டிலிருந்து திரும்பி வரும் நேரமாய்விட்டது. நான் போய் வருகிறேன்.

என்று சொல்லிக்கொண்டே கிழவன் எழுந்து எங்கள் விடையையும் எதிர்பாராமலே சென்றுவிட்டான். நாங்கள் ஒரே வியப்புக் கடலில் ஆழ்ந்துவிட்டோம். கிழவன் மறைகிற வரையில் அவனையே பார்த்துக்கொண்டிருந்தோம். அவன் ஒரு இளைஞனைப்போல் முறுக்காய் நடந்து சென்ற அழகு எங்கள் மனத்தில் ஆழப்பதிந்தது. கிழவன் மறைந்ததும் திரும்பினோம். உடனே எங்கள் இருவர் வாயினின்றும் ஒரேமாதிரியான சொற்கள் வெளிவந்தன. என்ன? “தாசியின் காதல்!”

வெண்பாப் புலி!

"அடியே! நான் என்ன செய்யட்டும்? பாரி, காரி, ஓரி முதலிய வள்ளல்கள் மாத்திரம் இப்பொழுது இருப்பார்களானல் நம்மிடத்தில் இந்தத் தரித்திரப் பிசாசு தலை காட்டுமா? எனது ஒரு வெண்பாவைக் கேட்டால் போதுமே! பொருளை வாரி வாரிக் கொடுப்பார்களே! அந்தப் புகழேந்திதான் என்னைப்போல் வெண்பாப் பாடி விடுவானு? நமது துரதிர்ஷ்டந்தான் ஏழு வள்ளல்களுக்குப் பிறகு எட்டாவது ஒன்பதாவது வள்ளல்கள் பிறக்காமலே போய்விட்டார்கள். என்ன செய்வது? காலக்கொடுமை!"

"வள்ளல்கள்தான் பிறக்கவில்லையே, வறுமையை விலைக்கு வாங்கிக்கொண்டு இந்தப் புலவர்களும் கவிராயர்களும் ஏன் பிறக்கவேண்டுமோ தெரியவில்லை! தினந்தோறும் புஸ்தகங்களைக் கட்டியழுதுகொண்டேயிருந்தால் வயிற்றுப் பசிக்கு வழி பிறந்து விடுமா? மத்தியான சாப்பாட்டிற்கு உங்கள் புஸ்தகங்களைத்தான் கிழித்துப் பரிமாறப் போகிறேன்."

"ஏண்டீ! உனக்கு அவ்வளவு துணிவுபிறந்துவிட்டதா? நான் என்ன செய்வேன்? வேலை கிடைக்காதாவென்றுதான் வெகு இடங்களில் அலைந்தேன். கிடைத்தால்தானே? நீ செய்யுந் தொந்தரவில் எங்கேயாவது சென்று தற்கொலை செய்துகொள்ளலாமென்று தோன்றுகிறது."

"உண்மைதான். தற்கொலை செய்துகொண்டவர்களெல்லாம் உங்களைப்போல்தான் வெளியில் சொல்லிக் கொண்டு இறந்தார்களாக்கும்! உங்கள் வல்லமை எனக்குத் தெரியாதா?"

"தெரிந்தவள் ஏன் என்னைத் தொந்தரவு செய்கிறாய்? பெண்களைப் பேயென்று சொன்ன புலவரின் வாயில் சருக்கரையைத்தான் போடவேண்டும்."

"ஆமாம்; அவர் வாயில் நீங்கள் சருக்கரையைப் போடுங்கள்; அவர் உங்கள் வாயில் மண்ணை அள்ளிப் போடுவார். மண்ணைச் சாப்பிட்டு நீங்கள் பசியாறலாமல்லவா? நாம்தான் வயிற்றை இறுக்கிக் கட்டிக்கொண்டு பேசாமல் இருந்து விடுகிறோம். குழந்தைகள் எப்படி இருப்பார்கள்? அவர்கள் பசியால் கத்துகிறது உங்கள் காதில் விழவில்லையா? "ஏன் தொந்தரவு செய்கிறாய்" என்கிறவர் ஏன் குழந்தைகளைப் பெறவேண்டும்?"

"என்ன சொன்னாய்! நானா குழந்தைகளைப் பெற்றேன்?"

"போதும்! போதும்! அதை இப்பொழுது வெளியில் இழுக்கவேண்டாம். குழந்தைகளின் பசியைத் தணிக்க ஏதேனும் வழி பாருங்கள்."

இவ்வாறு வெண்பாப் புலி வேலுப் புலவரின் மனைவி வெள்ளையம்மாள் சொல்லி முடித்ததும் உள்ளே போய் விட்டாள். புலவர் நீண்ட நேரம் யோசனை செய்தார். அவரது அகக்கண்ணில் புறநானூற்றுப் பாடல்களும், அதில் புலவர்கள் வறுமையின் கொடுமையால் பல வள்ளல்களிடஞ் சென்று பரிசு பெற்று வறுமை நீங்கியதாக வரும் நிகழ்ச்சிகளும் தோன்றின. உடனே அவர் கையில் பிரம்பொன்றைப் பிடித்துக்கொண்டு வெளியே புறப்பட்டார்.

மருதூரில் மாணிக்கமுதலியார் என்று ஒருவர் இருந்தார்; பெரிய தனவந்தர்; மிராசுதார். அயன் நன்செயில் ஐந்நூறு வேலி அவருக்குச் சொந்தமாயிருந்தது. அவருக்குச் செல்வம் எவ்வளவு அதிகமோ, அவ்வளவுக்குக் கல்வி மிகக்

குறைவு. ஈயாத லோபிகளின் மகாநாடு ஒன்று நடக்குமானல் அதற்குத் தலைமை வகிக்குந் தகுதியுடையவர்! ஆனல் புகழ்ச்சிப் பிரியர். யாராவது "உங்களைப்போல உலகத்திலுண்டா? மலையை அசையாமலிருக்கச் செய்வீர்கள். வானத்தை அண்ணாந்து பார்த்துவிடுவீர்கள்!" என்று புகழ்ந்துவிட்டால் போதும்! முதலியாரின் மொட்டைத் தலை மழமழவென்று பிரகாசிக்கும்! உடனே கொஞ்சமும் யோசியாமல் தனது இரும்புப் பெட்டியைத் திறந்து ஒரு காலணாவைத் தாராளமாய் நீட்டிவிடுவார்.

இவரைப் புகழ்ந்து பாடி ஏதாவது பொருள் பெற வேண்டுமென்று நினைத்தார் நமது வேலுப்புலவர். புலவர் மருதூரையடைந்து முதலியாரைக் கண்டார். அப்பொழுது முதலியார் நெற்களஞ்சியத்தில் நெல் அளந்து கொண்டிருந்தார்.

புலவர், இவ்வளவு பெரிய தனவந்தர் தாமே நெல் அளந்துகொண்டிருப்பதைக் கண்டு அதிசயித்து, அவர் தற்பெருமை இல்லாதவரென்று கருதினர். பிறகு அரிய கருத்துக்களையடக்கி அவரைப் புகழ்ந்து பாடினர். அவை முதலியார் செவியில் ஏறவில்லையென்பதை விரைவில் உணர்ந்துகொண்டு,

"கூந்தல் நெளியழகா! கோண்டை முடிச்சழகா!
தொந்தி வயிற்றழகா சுந்தரனே—சொந்தமாய்த்
தேடி யுனையடைந்தேன் தெய்வமே! என்பசி
ஓடித் தொலைந்திடவே ஓது"

என்று ஒரு பாட்டுப் பாடினர்.

முதலியார், பாட்டைக் கேட்டதும் களிப்படைந்தார். அவரையுமறியாமலே அவரது கைகளில் ஒன்று தலையையும்,

ஒன்று தொந்தியையும் தடவிப் பார்த்துக்கொண்டன! தலை எப்பொழுதும்போல் பளபளவென்று பப்ளிமாஸ் மாதிரி இருந்தது! மண்டையில் மருந்துக்குக்கூட ஒரு ம...... கிடையாது!

உடனே முதலியார் தம் கையாலேயே ஒரு கலம் நெல்லை அளந்து கொடுத்துப் புலவரை எடுத்துக்கொண்டு போகும்படி சொன்னார்.

புலவர் முதலியாருக்கு வணக்கஞ் செலுத்திவிட்டுக் கூலியாட்களைப் பிடித்து நெல்லை எடுப்பித்துக்கொண்டு வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தார். வழியில் கந்தசாமிக் கவிராயர் என்ற தமது நண்பரைச் சந்தித்தார். கவிராயர் வறுமையில் புலவருடன் களைக்காமல் போட்டி போடக் கூடியவர்! புலவர் நெல்லுடன் வருவதைக்கண்டு வியப்படைந்து "எங்கே கிடைத்தது!" என்று வினவினார்.

புலவர் "இதோ மருதூரிலிருக்கும் ஒரு மொட்டையரைப் பாடினேன். அவர் இந்த நெல்லைக் கொடுத்தார். வேண்டுமானால் நீரும் அங்கே போய்வாரும்" என்று சொன்னார்.

கவிராயர் மகிழ்வுடன் மருதூருக்குச் சென்று மாணிக்க முதலியாரின் முன்னே போய், அவரை இன்னாரென்று தெரிந்துகொள்ளாமையால், "ஐயா! அதோ போகிற புலவர் இங்குள்ள ஒரு மொட்டையரைப் பாடி நெல் பெற்றேனென்று சொன்னார். அந்த மொட்டையர் யார்? தயவு செய்து சொல்லுங்கள்!" என்றார்.

அவ்வளவுதான். முதலியாருக்குக் கோபம் மூக்குக்கு மேல் முட்டிக்கொண்டு புறப்பட்டது. ஒரு துள்ளுத்துள்ளி எழுந்தார். "என்ன சொன்னான்? என்னை மொட்டையனென்று சொன்னான்? இதோ பார் அவன் படுகிற பாட்டை!"

என்று தன் தொந்தியின் பாரத்தையும் பார்க்காமல் புலவரை நோக்கி ஓடினார்.

புலவர் திரும்பிப் பார்த்தார். முதலியார் ஓடி வருவதைக் கண்டார். முதலில் அவருக்கு ஆச்சரியமேற் பட்டது. அடுத்த நிமிஷமே விஷயத்தை ஒருவாறு உணர்ந்துகொண்டார். முதலியார் தம்மருகில் நெருங்கி வருஞ்சமயத்தில் சாதுரியமாக "முதலியார்வாளா ஓடி வருவது? அடடா! இப்படி ஏன் உங்கள் தலை மயிர் தோங்கத் தோங்க ஓடி வருகிறீர்கள்? ஒரு ஆள் விட்டிருந் தால் நானே வந்திருப்பேனே!" என்றார்.

பார்த்தார் முதலியார்! பிரமித்து நின்றுவிட்டார். அவர் கோபமெல்லாம் எங்கேயோ பறந்து போய்விட்டது. "இல்லை, புலவரே! உங்களுக்கு இன்னொரு கலம் நெல் கொடுக்கலாமென்று கூப்பிட ஓடி வந்தேன்!" என்று அசட்டுச் சிரிப்புடன் சொல்லிச் சமாளித்துக்கொண்டார்.

பட்டதாரி

நான் பி. ஏ. பரீட்சையில் தேறியதும் ஒரு 'கொயர்' காகிதமும் இரண்டு மூன்று ரூபாய்களுக்குத் தபால் தலைகளும் வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தேன். உடனே எங்கெங்கு வேலை கிடைக்குமென்று தெரிந்ததோ அங்கெல்லாம் ஒவ்வொரு மனு எழுதிப் போட்டுவிட்டு அப்பொழுதே வேலை கிடைத்துவிட்டதுபோல் அகமகிழ்ந்தேன். "கல உமி தின்றால் ஒரு அவல் தட்டாதா?" என்பது எனது எண்ணம்!.

ஒவ்வொரு நாளும் எந்த இடத்திலிருந்தாவது உத்தரவு கிடைக்குமென்று தபாலை ஆவலாய்ப் பார்த்துக்கொண்டிருந்தேன். தபாற் சேவகன் தெருக் கோடியில் வரும்பொழுதே என் வீட்டிற்குத்தான் வருகிறானென்று மனப் பதைபதைப் போடு பார்த்துக்கொண்டிருப்பேன். அவன் என் வீடு தாண்டிப் போன பிறகு ஏமாறிய நெஞ்சுடன் நாளைக்குக் கட்டாயம் ஏதாவது விடை கிடைக்குமென்று ஆறுதல் செய்துகொள்ளுவேன். பிறகு, அடுத்த நாள் தபாற்காரன் வருகிறவரையில் என் மனம் படும் பாட்டை என் போன்ற பட்டதாரிதான் அறியவேண்டும். ஒரு நாளாவது தபாற் காரன் என் வீட்டின் பக்கம் திரும்பவேயில்லை. சில சமயம் நான் அவனை வாயில் வந்தபடி திட்டியதுமுண்டு! ஆனால் அது அவன் காதில் படாது! பட்டால்—?

நான் அனுப்பிய மனுக்களுக்கு ஒரு பதிலுமில்லாமலிருக்கிறதே யென்று வாடிய மனத்துடன் வீட்டில் உட்கார்ந்திருந்த சமயத்தில் தபாற்காரன் ஒரு கடிதத்தைக்

கொண்டுவந்து கொடுத்தான். படபடப்புடன் அதைப் பிரித்துப் பார்த்தேன். "வேலை காலியில்லை" என்ற முதல் வாக்கியம் காணப்பட்டது. "இதற்குத்தானு நான் மனுப் போட்டது" என்று கோபத்துடன் அதைச் சுக்கு நூறுய்க் கிழித்தெறிந்தேன். என் தாய் "ஏண்டா அதைக் கிழித்தெறிந்தாய்" என்று கேட்டுக்கொண்டே வந்தாள். "ஒன்றுமில்லை" என்று சொல்லி அவளை அனுப்பிவிட்டு, என் அறைக்குச் சென்று ஒரு சோபாவில் சோகமாய்ச் சாய்ந்து உட்கார்ந்துகொண்டு சிந்தனையில் ஆழ்ந்தேன். கலாசாலைக் களியாட்டங்களெல்லாம் நினைவிற்கு வந்தன. பி. ஏ. பட்டத்தைப் பெருமையாக எண்ணி, இருந்த செல்வத்தையெல்லாம் அழித்துப் படித்ததையும் இப்பொழுது வேலையில்லாமல் திண்டாடுவதையும் நினைத்து ஏங்கினேன்.

அடுத்த நாள் என் ஏக்கமெல்லாம் நீங்கத் தபாற்காரன் ஒரு நீண்ட உறையைக் கொண்டுவந்து என்னிடம் நீட்டினுன். "வேலை காலியில்லை" என்று வந்த எத்தனையோ கடிதங்களைக் கிழித்தெறிந்த நான், அதுவும் அவ்வாருன கடிதமாய்த் தானிருக்குமென்று நினைத்து அலுப்புடன் வாங்கிப் பிரித்தேன். என்ன ஆச்சரியம்! தென்னிந்திய ரெயில்வே ஆடிட் ஆபீசில் கிளார்க்கு வேலைக்கு ஆள் வேண்டுமென்றும், நேரில் வந்து யோக்கியதாம்சங்களைக் காட்டி வேலையை ஒப்புக்கொள்ளலாமென்றும் அதில் எழுதியிருந்தது. நான் அப்பொழுது கொண்ட மகிழ்ச்சியைச் சொல்ல முடியுமா? உடனே ஆடம்பரமாக உடுத்திக்கொண்டு ஆபீசுக்குச் சென்று என் சர்டிபிகேட்டுகளைக் காட்டி வேலையில் அமர்ந்தேன்.

ஆரம்பத்தில் சம்பளம் இருபத்தெட்டு ரூபாய்தான். இதைவிட உயர்ந்த சம்பளமுள்ள வேலையில் அமர வேண்டுமென்ற ஆசை என் மனத்திற்குள் இருந்தாலும், இப்பொழுது எவ்வாருவது ஒரு வேலையில் ஒட்டிக்கொண்டால்

அதிக சம்பளத்தை அப்புறம் பார்த்துக்கொள்ளலாமென்று கருதினேன். ஏனென்றால், இம்மாதிரி இடங்களில் வேலை கிடைப்பது அரிதென்றும், இவ்வாபீசில் வேலை பார்ப்பவர்கள் பாக்கியவான்களென்றும், இதில் நுழைந்துகொண்டால் பின்னால் எவ்வளவோ நல்ல நல்ல பதவிகளுக்கு உயரலாமென்றும் கேள்விப்பட்டிருந்ததோடு அறிந்துமிருக்கிறேன்.

வேலையிலமர்ந்த ஆறுவது மாதத்திலேயே 'ஹெட் கிளர்க்' தம் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்று நீங்கினார். என்ன அதிர்ஷ்டம் பாருங்கள்! அந்த வேலை எனக்குக் கிடைத்தது. எனக்கு முன் கிளர்க்கு வேலை பார்த்துக் கொண்டு பலர் இருந்தாலும், நான் பி. ஏ. பட்டதாரியானதாலும் என் வேலைத் திறமையாலும் மேலதிகாரி எனக்கே அந்த வேலையை யளித்தார். உத்தியோகம் உயரச் சம்பளம் தொண்ணூறாக மேல்நிலை பெற்றது. எனக்கு முன் வேலை பார்த்துக்கொண்டிருந்த கிளர்க்குகளெல்லாம் என்னை வெறுப்போடு பார்த்துக் "கசு பிசு" வென்று பேசிக் கொண்டார்கள். அதற்கு நானென்ன செய்வது? அவர்களைப் பி. ஏ. படிக்கவேண்டாமென்று நான் தடுத்தேனா? கெட்டிக்காரத்தனமாய் ஆபீஸ் காரியங்களைக் கவனிக்க வேண்டாமென்று கெடுத்தேனா? ஆபீஸ் காரியங்களில் அழுமூஞ்சிகளாயிருந்தால்?.

இவ்வேலையிலேயே இரண்டு வருடங்கள் சென்றன. முன் பொறாமைப்பட்ட கிளர்க்குகளெல்லாம் என் சுறுசுறுப்பையும் வேலையில் காட்டும் அக்கறையையும் கண்டு அதிசயித்து அடங்கி நடந்தார்கள். இச்சமயம் "அக்கௌண்டண்ட்" திடீரென்று மாரடைப்பினால் இறந்து போனார். கேட்பானேன்? அந்த உத்தியோகம் எனக்கே கிடைத்தது.

சம்பளமென்ன? முன்னூற்றைம்பது? இப்பொழுது என் மனம் மகிழ்ச்சியால் பூரித்தது. என்றாலும் இன்னும் மேல் உத்தியோகங்களைத் தாவிப் பிடிக்கவே மனத்திற்குள் ஆசையடித்துக்கொண்டது. இந்த வேலையில் சம்பளத்தோடு "மேல்வரும்படி"யையுங் கண்டேன். நான் மிகத்திறமையோடு ஆபீஸ் காரியங்களை ஒழுங்காக நடக்கும்படி செய்து வருவதை ரெயில்வே ஏஜண்டு அறிந்து அடுத்த வருடம் "அஸிஸ்டெண்டு ஆடிட்டர்" உத்தியோகத்தை எனக்களித்தார். சம்பளம் நானூற்றைம்பது! பின் ஒரு வருடம் போக "ஆடிட்டர்" ஆனேன்! எண்ணூறு ரூபாய் என் சம்பளம்!

இப்பொழுது கும்பகோணத்திலிருந்து என் தாய்மாமன் தன் பெண் கமலத்தை எனக்குக் கலியாணஞ் செய்து தருவதாகக் கடிதத்திற்கு மேல் கடிதம் எழுதித் தொந்தரவு செய்தார். நான் வேலையில்லாமல் திண்டாடியபொழுது, என் தந்தை அப் பெண்ணை எனக்குக் கலியாணம் செய்பக் கேட்டதற்கு நான் ஏழையென்றும் வேலையில்லாமலிருக்கிறேனென்றும் நினைத்து, பெண் சிறியவளாயிருக்கிறாளென்று சாக்குச் சொல்லி மறுத்துவிட்டார். இப்பொழுது வலியத் தருகிறேனென்று வருந்தி வருந்தி எழுதுகிறார்! எல்லாம் பணத்தின் மகிமைதான்! "ஐயாயிரம் ரூபாய் வரதட்சிணை கொடுத்தால் கலியாணம் செய்துகொள்ளத் தடையில்லை. சாந்தியின்போது ரூபாய் ஐயாயிரமும் சீதனப் பொருள்கள் பத்தாயிரத்திற்குக் குறையாமலும் கொடுக்கவேண்டும்" என்று நானே என் மாமாவுக்குக் கடிதமெழுதினேன். நான் பெரிய உத்தியோகத்திலிருக்கிறேனென்பதற்காக என் மாமா அதற்கிசைந்து கமலத்தைக் கலியாணம் செய்து கொடுத்தார். ஆறாவது மாதத்தில் கமலம் பருவமடைந்தாள்.

ஒரு வருடம் செல்ல ஆயிரத்து இருநூறு ரூபாய் சம்பளமுள்ள 'சீப் ஆடிட்டர்' உத்தியோகத்திலேறினேன். கும்பகோணத்திலிருந்து என் மாமா பெண்ணுக்குச் சாந்திக் கலியாணம் செய்யவேண்டுமென்று கடிதமெழுதினார். நான் சொன்ன பிரகாரம் ரூபாயும் சீதனப் பொருளும் தரவேண்டுமென்று கண்டிப்பாய்க் கடிதமெழுதினேன். என்னை அவமதித்த மாமாவுக்கு அறிவு கொளுத்த வேண்டுமென்பது என் எண்ணம். வக்கீல் வேலையில் என் மாமா அதிகம் சம்பாதிக்காவிட்டாலும் எனது உத்தியோக மேம்பாட்டில் பரவசமடைந்து எங்கேயோ கடன் வாங்கி ஐயாயிரம் ரூபாயில் அரைத் தம்பிடியும் குறையாமல் என் கையில் கொடுத்து, கமலத்திற்கு வைரத்தில் ஒரு 'செட்' நகைகளும் 'ஸ்பிரிங்காட்' முதலிய சீதனப் பொருள்களும் ஏராளமாய் வாங்கி, சாந்திக் கலியாணத்தைச் சிறப்பாக நடத்தி வைத்தார். அப்பொழுது என் மனம் அடைந்த பூரிப்பை அனுபவித்தவர்களே அறியவேண்டும்.

நாலைந்து வருடங்கள் கழிந்தன. என் சொத்து இப்பொழுது இலட்சத்திற்குமேல் உயர்ந்திருந்ததை அறிந்த என் மனம் கட்டுக்கடங்காத மகிழ்ச்சியில் ஆழ்ந்தது. ஏழையாயிருந்தபொழுது என்னை ஏறிட்டும் பாராதவர்கள் இப்பொழுது என்னைப் பார்க்கத் தெருவில் நெடுநேரம் காத்துக் கிடப்பதையும், என்னை இலட்சியம் செய்யாதவர்களெல்லாம் எனக்குச் சலாம்செய்து என் தயவை நாடுவதையும் கண்டு, பணத்திற்குள்ள பெருமையையும், உத்தியோகத்திற்குள்ள செல்வாக்கையும் நன்குணர்ந்து பின்னும் பணஞ்சேர்ப்பதிலும், உயர்ந்த உத்தியோகத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்து தருணம் வாய்த்தபொழுது தாவிச் சென்று சிம்மாசனம் போட்டுக்கொள்வதிலும் கண்ணுங் கருத்துமுடையவனாயிருந்தேன்.

ஆங்கில மொழி எனக்குத் தாராளமாகப் பேச வரும். ஆங்கிலேயர் பலரின் பழக்கமேற்பட்டதால் அவர்களைப் போல் பேசவும் நன்கறிந்துகொண்டேன். ஆகையால் ஐரோப்பியர்களிற் பலர் எனக்கு நண்பரானார்கள். அதிகம் சொல்வானேன்? ரெயில் ஏஜண்டே என்னுடன் நெருங்கிய நண்பர்போல் மிக்க விருப்பத்தோடு பேசுவார். அவர் மனைவிக்கு என்னுடன் பேசுவதில் மிக மகிழ்ச்சி. நான் ஆடை உணவுகளிலெல்லாம் ஐரோப்பியர் மாதிரியைப் பின்பற்றி முழு ஐரோப்பியனாக மாறியிருந்தேன். இதிலேயே மதிப்பிருக்கிறபடியால் இவ்வாறு நடந்துகொள்ள நான் பின் வாங்கவில்லை. என் ஐரோப்பிய உடைக்கும் 'கிராப் தலைக்கும்' சிவந்த தோலுக்கும் என்னைப் பார்க்கிறவர்களுக்கு ஐரோப்பியனோ என்ற ஐயத்தையுண்டாக்கி ஒருவிதக் கவர்ச்சியையளித்தது. ஆதலால் ஏஜண்டின் மனைவி என்னுடன் பேச விரும்புவதில் ஆச்சரியமில்லையல்லவா?

நான் வேலையில் புலி என்பது ஏஜண்டின் அந்தரங்கமான அபிப்பிராயம். நாளேற ஏற ஏஜண்டின் பிரியமும் மதிப்பும் வளர்ந்து என்னைத் தம்மிடம் அந்தரங்கக் காரியதரிசியாக அமர்த்திக்கொண்டார். இவ்வேலையை நான் பெறுவதற்கு ஏஜண்டு மனைவி சிபார்சு செய்திருக்கிருள் என்பதாக எல்லோரும் பேசிக்கொண்டார்கள். என் காதிலும் விழுந்தது. அதனாலென்ன? அவ்வேலையில் ஏஜண்டுக்குத் திருப்தியாக நடந்துகொண்டு அவருடைய அன்பையும் ஆதரவையும் அதிகமாகப் பெற்றேன்.

இவ்வளவு சிறப்பாக நான் படிப்படியாய் உயர்ந்து வாழ்ந்து வரும் நாளில், திருச்சிக்கு விஜயம் செய்திருந்த சென்னை கவர்னர் அவர்களுக்கு ஏஜண்டு தம் வீட்டில் விருந்தொன்று நடத்தினார். அவ்விருந்திற்கு ஏஜண்டும்

அவர் மனைவியும் என்னை அழைத்திருந்தார்கள். விருந்திற்குப் போனேன். எல்லோரும் சிற்றுண்டிகளை யுண்டு தேநீர் பருக ஆரம்பித்தோம். அப்பொழுது ஒரு ஈ என் மூக்கில் நுழைய, தேத்தண்ணீர் மூக்கின் வழியாய் வெளியே வரும்படி ஒரு பெரும் தும்மல் தும்மினேன்! கண்கள் இரண்டிலும் நீர் வந்தது. கைத்துண்டால் துடைத்துக்கொண்டு விழித்துப் பார்த்தேன்! எதிரில் ஒருவரையும் காணவில்லை. ஏஜண்டையோ, ஏஜண்டு வீட்டையோ காணோம்! திகைத்தேன்! மனம் படபட வென்று அடித்துக்கொண்டது. சோபாவில் சாய்ந் துள்ளதை உணர்ந்தேன். என் மூக்கினுள் நுழைந்து தூக்கத்தையும், இன்பக் கனவையும் கலைத்த ஈ கீழே விழுந்து புரண்டுகொண்டிருந்தது. பறக்க முடியாமல் அது படும் வேதனையும் என் மனோ வேதனையும் ஒன்றாயிருப் பதை எண்ணினேன். நீங்கள் சிரிக்கலாம்! என்போலும் பகற்கனவு காணும் பட்டதாரிகள் இல்லையென்று நினைக்கிறீர்களா?

நேர்மை அளித்த பரிசு !

'செல்வக் கொழுந்து முதலியார் கைது செய்யப் பட்டார்' என்ற செய்தி, தூத்துக்குடி முழுவதும் காட்டுத் தீ போல் பரவியது. இதைக் கேட்ட எல்லோரும் வியப் படைந்து நின்றார்கள். சிலர் இதை உண்மையென்று நம்ப வில்லை. 'முதலியாராவது கைது செய்யப்படுவதாவது! வீண் புரளிதான்!' என்று அலட்சியத் தன்மையுடன் அவர்கள் சொன்னார்கள்.

முதலியாரது செய்தியைப் பற்றிப் பேசுகிறவர்களெல் லாம், மாணிக்கவாசகம் என்னும் வாலிப இன்ஸ்பெக்டரைப் பற்றியும் பேசினார்கள். பலர் அவனைத் திட்டினார்கள். 'இவ்வளவு பெரிய மனிதரைக் கைது செய்யவாவது! உலக அனுபவம் தெரியாத சிறு பையன்' என்றனர் சிலர். 'இலஞ்சம் கேட்டிருப்பான், முதலியார் மறுத்திருப்பார். அதை மனத்தில் வைத்துக்கொண்டு சமயம் பார்த்துக் கைது செய்திருக்கிறான் முட்டாள்!' என்றனர் வேறு சிலர். மாணிக்கவாசகத்தைப்பற்றிப் பரிந்து பேசினவர் ஒருவரும் இல்லை!

* * *

மாணிக்கவாசகம் எல்லோரிடமும் இனிமையாகப் பழகும் இயல்புடையவன்; ஆனால் நேர்மையும், கண்டிப்பும் உள்ளவன்; உயிர் போவதாயிருந்தாலும், ஓராயிரம் பொன் கிடைப்பதாயிருந்தாலும் ஒழுங்கிலிருந்து அணுவளவும் வழுவ மாட்டான். இதனால் சிலர் இவனிடம் குறைப்படுவ துண்டு. ஏனென்றால், அவர்களின் நெறி தவறான செயல்களை நிறைவேற்றுவதற்கு இவன் இணங்குவதில்லை!

மாணிக்கவாசகம் பி. ஏ. பரீட்சையில் தேர்ச்சி பெற்றதும், உப்பு இலாகா அலுவலகத்தில் வேலை பார்த்துவந்தான். சம்பளம் குறைவுதான். இவனுடைய பெரிய குடும்பத்திற்கு ஐம்பது ரூபாய் போதாது. வயதான தாய் தந்தையர் விதவையான இரண்டு தமக்கைமார், இரண்டு தம்பிகள் ஆகிய எல்லோரையும் காப்பாற்றவேண்டிய பொறுப்பு இவனுக்கு ஏற்பட்டிருந்தது. முன்னோர்கள் தேடிய சொத்தோ, தந்தை சம்பாதித்த சொத்தோ ஒன்றும் கிடையாது. சுருக்கமாய்ச் சொன்னால் மாணிக்கவாசகம் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன் எனலாம்.

திருநாவுக்கரசு முதலியார், மதுரை மீனாட்சி மில்லில் காலமுழுவதும் பாடுபட்டவர். அவர் தன் மகன் மாணிக்க வாசகத்தைக் கல்லூரிப் படிப்பில் கரை காணச் செய்ய விரும்பி, அரும்பாடுபட்டார்; பல துன்பங்களைப் பொறுத்தார். கொண்ட விருப்பம் நிறைவேறியதைக் கண்டு அக மகிழ்ந்து அவற்றை மறந்தார். 'பையன் சிறந்த பதவியில் வேலைக்கமர்ந்து பெரும் பொருள் தேடுவான்; நமது துன்பங்களெல்லாம் பகலவனைக் கண்ட பனிபோல் மாயமாய் மறைந்துவிடும்' என்று எதிர்காலக் காட்சிகளை எண்ணிப் பார்த்து இறுமாந்தார். பாவம்! அவர் பட்ட துன்பங்கள் அவருக்கல்லவா தெரியும்!

மாணிக்கவாசகம் விரும்பியிருந்தால் தன் சம்பளத்தைப் போல் மூன்று பங்குத் தொகையை மாதந்தோறும் பெறக் கூடும். வேலை பார்க்கும் அலுவலகத்தில் அதற்கு வேண்டிய வழிகள் நிறைய இருந்தன. ஆனால், அவை தவறான வழிகள். இலஞ்சம் வாங்குவதை எவர்தான் சரியான வழி யென்று சொல்வார்கள்?

எப்பேர்ப்பட்டவர்களும் பணத்திற்கு முன் பஞ்சுபோல் ஆய்விடுகிறார்கள்! பேராசைக்காரர்கள் கொள்ளை

லாபத்தைக் குறுக்கு வழியில் தேடக் கருதிச் சிறு தொகையைப் பொருட்படுத்ாது செலவழிக்கத் துணியும் பொழுது எளிய சம்பளக்காரர்கள் அதற்கு இரையாய் விடுவதில் வியப்பில்லை. மனிதரின் தன்மையை மதித்தறியும் உரைகல் போல் இந்நிகழ்ச்சி எங்கும் இருக்கிறது. பலர் இந்தப் பணச்சுழலில் அகப்பட்ட துரும்புகளாகவே சுழல்கின்றனர்; சிலரே கற்பாறை போல் துளங்காமல் காணப்படுகின்றனர். இச்சிலரில் ஒருவனாகவே மாணிக்கவாசகம் விளங்கினான்.

தன் மகன் நேர்மையுடன் வேலை பார்த்து வருவதில் திருநாவுக்கரசருக்கு பெருமையாகவே இருந்தது. ஆயினும் குடும்பநிலை அவர் மனத்தில் அதற்கு நீண்டநாள் இடந்தரவில்லை. தக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்பொழுது தன் மகன் அதைப் பயன்படுத்திக்கொள்ளாமல் காலத்தை வீணாக்குகிறானே என்று மனம் புழுங்கினார். தன் எண்ணத்தை வெளிப்படையாக மகனிடம் சொல்லவும் அவர் துணியவில்லை. இது சொல்லக்கூடிய செய்தியல்லவே!

மூன்று ஆண்டுகள் இவ்வாறு கழிந்தன. இதற்கிடையில் மாணிக்கவாசகத்திற்கு மணம் புரிய வேண்டும் என்ற பேச்சு எழுந்தது. சிலர் தத்தம் பெண்களைத் தர விரும்பி வீட்டிற்கு வந்தனர். வேறு சிலர் ஆள் வாயிலாக மணப் பேச்சை நிகழ்த்தினர். இவர்களில் செல்வர்களும் உண்டு. மாணிக்கவாசகம் படித்தவனாகவும், அழகனாகவும், ஒழுங்குள்ளவனாகவும் இருந்ததாலேயே இவ்வாறு பலர் போட்டியிட்டனர். மாணிக்கவாசகம் இப்பொழுது ஏழையாயிருந்தாலும் வருங்காலத்தில் உயர்பதவி பெற்றுச் செல்வனாய்த் திகழ்வான் என்று எல்லோரும் நம்பினர். வீடு நிலத்தோடு ஒரு செல்வர் தம் பெண்ணைத்தர முன்வந்தபோது திருநாவுக்கரசு முதலியார் திருமணத்தை முடித்துவிட விரும்பினார்.

ஆனல், மாணிக்கவாசகம் மறுத்துவிட்டான். தனக்கு உயர்பதவி ஏற்பட்டு ஒரு நிலைமையில் அமர்ந்த பின்னரே திருமணப் பேச்சை எடுக்கவேண்டுமென்று கண்டிப்பாய்த் தெரிவித்து விட்டான். என்ன செய்வார் தந்தை? வருகிற சீதேவியைக் காலால் உதைப்பதுபோல் முரட்டுத்தனமாய் நடந்துகொள்ளுகிருனே என்று மகன் மீது வெறுப்புக் கொள்ளலானர்.

இச்சமயத்தில், தூத்துக்குடியில் வேலை பார்க்கும்படி சென்னை அரசியலாரிடமிருந்து மாணிக்கவாசகத்திற்கு ஓர் உத்திரவு கிடைத்தது. அது உப்பள இன்ஸ்பெக்டர் வேலை. திடீரென்று இந்த உயர் பதவி கிடைத்தது பற்றி மாணிக்க வாசகத்தைக் காட்டிலும் திருநாவுக்கரசுதான் பெருமகிழ்ச்சி அடைந்தார். அதனல் மகன் மீதிருந்த வெறுப்பும் மறைந்தது.

மாணிக்கவாசகத்திடம் வேலை உத்திரவைக் கொடுத்த மேலதிகாரி, மலர்ந்த முகத்துடன் அவனுடைய நற்குணங்களைப் பாராட்டிப் பேசியதோடு, அவனைப் பிரிய நேர்ந்தது பற்றி வருத்த மேற்பட்டாலும் உயர்பதவியிற் செல்வதால் மகிழ்ச்சி கொள்வதாகவும், இன்னும் உயர்நிலைக்குச் செல்லக் கூடும் என்று தாம் நம்புவதாகவும் உள்ளன்புடன் தெரிவித்தார். அவ்வதிகாரியுட்பட அலுவலகத்தார் யாவரும் மாணிக்கவாசகத்திற்கு ஒருநாள் மாலை சிற்றுண்டியளித்துப் பெருமைப்படுத்திப் புகழ்ந்து பேசி விடை கொடுத்தனர்.

மாணிக்கவாசகம் மதுரையிலிருந்து தன் குடும்பத்தாருடன் தூத்துக்குடி வந்து சேர்ந்தான். புதிதாக வந்த அவனைப் பலர் வரவேற்றனர். வந்த மறுநாளிலிருந்தே மாணிக்கவாசகம் தன் கடமையைக் கவனிக்கலானன்.

ஒருநாள் திருநாவுக்கரசு முதலியார் தனது மகன் அறைக்கு வந்தார். அன்று விடுமுறை நாள். மாணிக்க

வாசகம் தந்தையின் முகத்தைப் பார்த்தான். அவர் ஓராசனத்தில் அமர்ந்ததும், "மகனே! உனக்கு நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. நமது குடும்பம் இருக்கும் நிலைமை உனக்கு நன்றாய்த் தெரியும். துன்பத்திலேயே ஆழ்ந்திருக்கிறோம். நானோ பட்டமரம் போல் நிற்கிறேன். எப்பொழுது விழுவேனோ தெரியாது. நீதான் குடும்பத் தலைவன். எல்லாப் பொறுப்பும் உன்னுடையதே. கடவுள் அருளால் உனக்கு மேல்வரும்படி கிடைக்கும் வேலையாகக் கிடைத்திருக்கிறது. சம்பளம் மனிதன் கொடுக்கிறான். அதனால் வளர்ச்சியடைய முடியாது. மேல்வரும்படி கடவுளால் கொடுக்கப்படுகிறது. அதனால் முன்னுக்கு வரலாம். இதில் சிறிது அறிவைச் செலுத்தவேண்டும். இடைவிடாது பெருகிக்கொண்டிருக்கும் ஊற்றுப் போன்றது மேல் வரும்படி. ஆகையால் மனிதனைப் பார்த்து அவனுடைய தேவைகளை உணரவேண்டும். சந்தர்ப்பங்களைக் கவனிக்க வேண்டும். ஏற்றவாறு நடந்துகொள்ள வேண்டும். நீ அறிவாளி. நான் உனக்கு விளக்கமாய்த் தெரிவிக்க வேண்டியதில்லை' என்றார். நீண்ட நாட்களாய் இதைத் தெரிவிக்கத் தயங்கிக்கொண்டிருந்த திருநாவுக்கரசு அன்று துணிந்து தன் உள்ளத்தைத் திறந்து காட்டினார். குடும்பத்தொல்லை, மகனுடைய நேர்மை ஆகிய இவ்விரண்டிற்கும் இடையில் அகப்பட்டு ஊசலாடிக்கொண்டிருந்த அவரைக் குடும்பத் தொல்லையே வென்று விழுங்கியது!

மாணிக்கவாசகம் தந்தையின் மொழிகளைக் கேட்டுக் கொண்டு வாய்திறவாமல் இருந்தான், குடும்பத் தொல்லையால் அவர் மனப்போக்கு மாறியிருப்பதைக் கண்டு உள்ளூர வருந்தினான். நன்மொழி சொல்லவேண்டிய தந்தையே தவறான நிலைக்கு வரும்படி செய்துள்ள வறுமையின் கொடுமையை ஆழ்ந்து எண்ணினான். பிறகு ஒன்றும்

பேசாமல் வெளியே போய்விட்டான். தந்தைக்குக் கீழ்ப் படிந்து நடக்கும் இயல்புடையவன் மாணிக்கவாசகம்.

* * *

ஒரு நாள் இரவு. மாணிக்கவாசகம் தன் அலுவலகத்தில் இருக்கிறான். கடற்கரையை அடுத்துள்ள உப்பளத்தைக் காக்கவேண்டிய பொறுப்பு அவனுக்கு அவ்விரவில் இருந்தது. உரிமை பெறுமல் எவரும் உப்பைக் கொண்டு போகலாகாது என்பது அரசியலார் உத்தரவு. மீறி நடப்போரைக் கைது செய்து அரசியலாரிடம் ஒப்படைக்க வேண்டிய கடமை மாணிக்கவாசகத்திற்கு இருந்தது.

மாணிக்கவாசகம் இருந்த இடத்திலிருந்து ஏறக்குறைய ஒரு மைல் தூரத்தில் உப்பளம் இருந்தது. அலுவலகத்தில் இருந்தபடியே உப்பளத்தை அவன் கவனித்துக்கொள்வான். இவ்வழக்கப்படியே அன்று தனது அறையில் இருக்கிறான். நள்ளிரவு ஆய்விட்டது. சன்னல் வழியாக உப்பளத்தை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்த மாணிக்கவாசகம் அப்படியே சாய்வு நாற்காலியில் தூங்கிவிட்டான். ஏதோ கனவு கண்டவன் போல் திடுக்கிட்டுக் கண்விழித்தான். விரைவாக எழுந்து உப்பளம் இருக்கும் திசையில் கண்ணைச் செலுத்திப் பார்த்தான். இரட்டை மாட்டு வாண்டிகள் புகைவண்டித் தொடர்போல் நீளமாய்ச் செல்வது நன்றாய்த் தெரிந்தது. வண்டிகள் செல்லும் 'கடக், கடக்' ஓசை, கடல் அலைகளின் 'ஓ' என்ற இரைச்சலை அடக்கிக்கொண்டு வந்தது. இதைக் கண்ட மாணிக்கவாசகத்தின் மனத்தில் கிளர்ச்சி எழுந்தது. மேல் சட்டையை விரைவாக எடுத்து அணிந்துகொண்டான். கைத்துப்பாக்கியை எடுத்துக்கொண்டான். தூங்கிக்கொண்டிருந்த இரண்டு ஆட்களை எழுப்பித் தன்னுடன் வரும்படி உத்திரவிட்டான். சைக்கிளில் ஏறிக்கொண்டு உப்பளத்தை நோக்கிப் புறப்பட்டான். ஆட்களும் சைக்கிளில் பின் தொடர்ந்தார்கள்.

மூவரும் வரிசையாகச் செல்லும் வண்டிகளின் முன்னால் போய்ச் சைக்கிளை விட்டு இறங்கினார்கள். மாணிக்கவாசகம் முதலில் செல்லும் வண்டிக்காரனைப் பார்த்து, 'யாரது? வண்டியை நிறுத்து!' என்று அதிகார மிடுக்குடன் உரத்துச் சொன்னான். அரைகுறையான தூக்கத்துடன் வண்டியில் சாய்ந்துகொண்டிருந்த வண்டிக்காரன் பரபரப்புடன் நிமிர்ந்து உட்கார்ந்து கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தான். அவன் முகத்தில் கலவரம் நிறைந்தது. கயிற்றை இழுத்துப் பிடித்து மாட்டை நிறுத்தினான். 'கடக்' என்ற ஓசையுடன் வண்டி நின்றது. தொடர்ந்து வந்த நூற்றுக்கு மேற்பட்ட வண்டிகளும் அங்கங்கு நின்று விட்டன. தூக்கக் கலக்கத்திலிருந்த வண்டிக்காரர்கள் யாவரும் விழித்துக்கொண்டார்கள்.

"வண்டியிலிருப்பது என்ன மூட்டை? எங்கே போகிறது?" என்று முதல் வண்டிக்காரனைப் பார்த்து அதட்டலுடன் கேட்டான் மாணிக்கவாசகம்.

வண்டிக்காரன் அஞ்சிவிட்டான். தடுமாற்றத்துடன் வண்டியிலிருந்து கீழே இறங்கிப் பணிவு காட்டி நின்றான். என்ன சொல்வதென்று அவனுக்குத் தோன்றவில்லை. இதற்குள் வண்டிக்காரர்கள் எல்லோருக்கும் இச்செய்தி எட்டிவிட்டது. அவர்களிற் சிலர் குசுகுசுவென்று ஏதோ பேசிக்கொண்டு, கடைசி வண்டிக்கு விரைந்து ஓடினார்கள்.

மாணிக்கவாசகம் வண்டிக்காரனின் தயக்கத்தைக் கண்டு கோபம் கொண்டான். "மூட்டையில் உள்ள பொருள் என்ன?" என்று கத்தினான். வண்டிக்காரன் வாய் திறக்கவில்லை; பயம் நிறைந்த முகத்துடன் நின்றான். மாணிக்கவாசகத்திற்குச் சந்தேகம் அதிகமாயிற்று. வண்டியின் அருகிற்போய் ஒரு மூட்டையைத் தொட்டுப்

பார்த்தான். ஐயம் உறுதியாயிற்று. எல்லாம் உப்பு மூட்டைகள் !

மாணிக்கவாசகம் துப்பாக்கியை வெளியில் எடுத்துக் கையில் வைத்துக்கொண்டான். அதைக்கண்டதும் வண்டிக்காரன் நடுநடுங்கிவிட்டான்.

"வண்டிகள் எங்கே போகின்றன?"
"மதுரைக்கு!"
"உரிமைச்சீட்டு எங்கே?"
"............"
"யாருடைய வண்டிகள்?"
"உம்...உம்...முதலியார் ஐயா வண்டிகள்!"
"அது யார் முதலியார் ஐயா?"
"அவர் தானுங்க...! செல்வக்கொழுந்து முதலியார்!"

மாணிக்கவாசகம் திடுக்கிட்டான். செல்வக்கொழுந்து முதலியாரைப்பற்றி அவன் நன்றாய்க் கேள்விப்பட்டிருந்தான். தூத்துக்குடியில் அவரையறியாதவர் ஒருவரும் இல்லை. அவ்வூரில் முதல் பணக்காரர் அவரே. சிற்றரசர் போன்ற செல்வாக்குடையவர். அவர் தயவை எல்லோரும் நாடுவர். அவரால் எதுவும் செய்ய இயலும். அவருக்குக் கடமைப்படாதவர் அவ்வூரில் கிடையாது. பெரிய பெரிய நிலையில் உள்ளவர்களெல்லாம் அவர் வீட்டில் வந்து தங்கிச் சிறந்த உணவுகளை உண்டு செல்வார்கள்.

முதலியார் உப்பு வியாபாரத்தில் தேர்ச்சி பெற்றவர். ஏராளமான ஆட்களைத் தன் கீழ் வைத்துக்கொண்டு, மிகத் திறமையாகத் தொழில் புரிபவர். இடையறாத முயற்சியுடையவர். யார் யாரிடத்தில் எவ்வெவ்வாறு பேச வேண்டும், நடந்துகொள்ள வேண்டும் என்பவற்றை நன்கறிந்தவர். வெற்றியில் களிப்போ, தோல்வியில் களைப்போ

அடையாதவர். எப்பொழுதும் தொழில் செய்துகொண்டிருப்பதே தமது கடமை என்னும் கொள்கையைக் கடைப்பிடிப்பவர் போல் சுறுசுறுப்பாக அலுவல்களைக் கவனிப்பவர். எடுத்த செயலை எவ்வாறேனும் முடிக்கும் உறுதி மனம் படைத்தவர். அதனாலேயே அளவற்ற செல்வம் அவரைத் தேடி வந்தடைந்தது.

இயற்கையில் கிடைக்கும் உப்பை எல்லோரும் எடுக்க முடியாதபடி அரசியலார் விதி ஏற்படுத்திக் கட்டுப்படுத்தியதால், அரசியலாருக்குரிய கட்டணத்தைச் செலுத்தி, உப்பெடுத்துக்கொள்ளும் உரிமையைப்பெற்றிருந்தார் முதலியார்.

அவரால் அரசியலாருக்கு ஆண்டுதோறும் பெருந்தொகை கட்டணமாகக் கிடைத்து வந்தது. இத்தொகையை முதலியார் தமது இலாபத்திலிருந்தே கொடுத்துவந்தார். இவ்வாறு கட்டணத்தைச் செலுத்தும்பொழுதெல்லாம் இலாபத்தின் பெரும்பகுதி குறைந்துபோவது முதலியார் மனத்தை உறுத்தியது. ஆகையால் குறுக்கு வழி தேடிக் கட்டணத்தைக் குறைக்க முயன்றார். உரிமை பெற்ற உப்பு மூட்டைகள் ஒரு பங்கு என்றால், உரிமை பெறாத மூட்டைகள் இரண்டு பங்காக வியாபாரம் செய்யும் முறைகளைக் கையாண்டார். செல்வமிக்கவராகையால் இதற்கு அஞ்சவில்லை. இடையில் ஆபத்து ஏற்பட்டால் பணத்தைக் கொண்டு சமாளித்துக் கொள்ளலாம் என்ற தைரியம் அவருக்கிருந்தது. அதனாலேயே இப்பொழுது உரிமைச்சீட்டின்றி உப்பு மூட்டைகளை நள்ளிரவில் கொண்டு செல்லலானார்.

முதலியார் கடைசி வண்டியில் அரைத்தூக்கத்தில் படுத்திருந்தார். திடீரென்று சில வண்டிக்காரர்கள் வந்து அவரை எழுப்பி, நிலைமையைத் தெரிவித்தார்கள். முதலியாருக்கு இது புதிதன்று; எத்தனையோ முறை இவ்வாறு

ஏற்பட்டிருக்கிறது. ஒரு முறையிலேனும் ஆபத்தில் அகப்பட்டதில்லை. ஆகையால் முதலியார் அச்சமோ, பரபரப்போ அடையவில்லை. பணத்தின் வல்லமையில் அவருக்கு அவ்வளவு நம்பிக்கை! சிறிது செருக்குடன், "நீங்கள் முன்னே போங்கள்! நான் வருகிறேன்" என்று சொல்லி அனுப்பிவிட்டு, அமைதியுடன் இடுப்பில் சொருகியிருந்த பொடிமட்டையை எடுத்து உறிஞ்சினர். பிறகு வண்டியை விட்டு இறங்கி முதல் வண்டியின் அருகில் வந்து மாணிக்கவாசகத்தைப் பார்த்தார். முதலியாரின் பெயரைக் கேட்டுத் திடுக்கிட்ட அவன், அதே சமயத்தில் முதலியாரே நேரில் வந்து நிற்பதைக் கண்டு திகைத்தான். ஆயினும் மறு நொடியில் தன்னிலையடைந்தான்.

"தாங்கள்தான் வண்டிகளை நிறுத்தினீர்களா?" என்றார் முதலியார். அவர் முகத்தில் குறும்புத்தனமான புன்சிரிப்பு நிலவியது.

"ஆமாம்!" என்றான் மாணிக்கவாசகம். அவன் குரலில் அலட்சியம் நிரம்பியிருந்தது.

"தங்களைப் போன்றவர்களின் தயவில்லாமல் எங்களைப் போன்ற வியாபாரிகள் எவ்வாறு பிழைக்கமுடியும்? தாங்கள் புதிதாக வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். தங்களைப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பமில்லாமற் போய்விட்டது. அது பற்றி வருந்துகிறேன். ஆயினும் இப்பொழுது தங்களைப் பார்க்க நேர்ந்ததற்கு மகிழ்ச்சியடைகிறேன்."

"ஐயா! தாங்கள் ஏதேதோ வீண் மொழிகளைப் பேசுகிறீர்கள்? உப்பு மூட்டைகளைக் கொண்டு செல்வதற்கு உரிமைச் சீட்டு இருந்தால் அதைக் காட்டுங்கள். இல்லாவிட்டால் நான் என் கடமையைச் செய்யவேண்டும். அரசியலார் கட்டளைப்படியே நான் வண்டிகளை நிறுத்தியிருக்கிறேன்."

"நாங்கள் அரசியலாரைக் கண்டோமா? கட்டளையைக் கண்டோமா? எங்களுக்குத் தாங்கள்தான் எல்லாம்! தங்களுக்குச் செலுத்தவேண்டிய காணிக்கையைச் செலுத்தாமல் செல்வது தவறுதான். அதையுணர்ந்தே நான் ஓடிவந்தேன்!"

முதலியார் மொழிகளைக் கேட்ட மாணிக்கவாசகம் சீற்றங்கொண்டான். அவன் கண்கள் சிவந்தன. "ஐயா! மனச்சான்றைப் பணத்திற்கு விற்கும் ஒருவனாக என்னை மதித்துப் பேசுகிறீர்கள். தாங்கள் இப்போது கைதியாக இருக்கிறீர்கள். காலையில் தாங்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்" என்று படபடவென்று சொல்லிவிட்டுத் தன்னுடன் வந்த வேலைக்காரன் பக்கம் திரும்பினான். 'முத்து! இவரைக் கைது செய்து கொண்டு போ" என்று கட்டளையிட்டான்.

முதலியார் திகைத்துவிட்டார். வண்டிக்காரர்கள் பரபரப்படைந்தனர். முத்து முன்னால் வந்தான். ஆனால் முதலியாரைத் தொடுவதற்கு அவனிடம் துணிவில்லை. மாணிக்கவாசகத்தையும் முதலியாரையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டு நின்றான். முதலியார் இந்த அவமானத்தை இப்பொழுதுதான் முதன் முதலாக அடைய நேர்ந்தது. படபடக்கும் உள்ளத்தைத் தேற்றிக்கொண்டு, "சிறு பையன்தானே! உலகத்தை இன்னும் உணரவில்லை! வலையில் விழவில்லை போலும்! அறியாப் பையன்! அதனால் தான் கோபமாயிருக்கிறான்! சிறிது நேரத்தில் சரியாய் விடுவான்!" என்று தன்னுள் எண்ணிக்கொண்டார். பிறகு, "தம்பீ! தாங்கள் அப்படிச் சொல்லக்கூடாது. என் மதிப்புப் போய்விடும். வாழ்க்கையே குலைந்து போகும். எனக்கு ஏற்படும் அவமானத்தால் தங்களுக்கு என்ன பயன்? தயவு செய்ய வேண்டும். இரக்கம் காட்டினால் என் மானம்

தங்கும். தங்களுக்கும் பயன் ஏற்படும்" என்று நயமாகத் தாழ்ந்த குரலில் பேசினர். மாணிக்கவாசகம், "இவ்வாறு ஆசை காட்டும் பேச்சை என்னிடம் பேசாதீர்கள்" என்று கண்டிப்பாய்த் தெரிவித்தான்.

முதலியார் கலகலத்துப்போனர். ஆயினும் உறுதியைத் தளரவிடாமல் தன்னுடன் வந்த காரியதரிசியைப் பார்த்து, 'இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு ஆயிரம் ரூபா நோட்டு ஒன்றைக் காணிக்கையாக வை. அவர் கொடிய பசியால் வருந்தும் புலிபோல் இருக்கிருர்!' என்றார்.

இதைக் கேட்ட மாணிக்கவாசகம் கடுங்கோபங் கொண்டான். "ஆயிரமன்று; இலட்சமானாலும் என்னை நேர்மை வழியிலிருந்து விலகச் செய்ய உம்மால் முடியாது" என்று உறுதியாய்ச் சொன்னன்.

முதலியார் இம்மொழிகளைப் பொருட்படுத்தவில்லை. தன் முயற்சியைத் தொடர்ந்து நடத்தவே அவர் மனம் தூண்டியது. நேர்மைக்கும் பணத்திற்கும் போட்டி நடந்தது. ஓராயிரத்திலிருந்து படிப்படியாக உயர்ந்து முப்பதினயிரம் வரையில் வந்தது. ஆனல் பணமாகிய அலை நேர்மையாகிய மலையை மோதி அசைக்க முடியவில்லை! முதலியார் தளர்ந்து விட்டார். கவலை படர்ந்த முகத்துடன், "இதற்கு மேல் என்னல் கொடுக்க முடியாது. பிறகு தங்கள் விருப்பம்" என்றார்.

மாணிக்கவாசகம் அவர் மொழிகளைச் செவியேற்காமல் வேலையாளிடம் மறுபடியும் அவரைக் கைது செய்யும்படி கட்டளையிட்டான். வேலையாள் இன்ஸ்பெக்டரை மனத்துள் திட்டிக்கொண்டே முதலியார் அருகிற் சென்றான். விலங்குடன் வரும் வேலையாளைக் கண்டதும் முதலியார் அஞ்சி இரண்டடி பின் வாங்கினர். மீண்டும் மாணிக்கவாசகத்தைப்

பார்த்து, "ஐயா! தயவு செய்யுங்கள். முப்பத்தையாயிரம் தருகிறேன்" என்று கெஞ்சிக் கேட்டார். "முடியாது" என்றான் மாணிக்கவாசகம். "நாற்பதினாயிரம்" என்றார் முதலியார். "வீண் மொழி ஏன்? நாற்பது லட்சமானாலும் நடக்காது. முத்து! ஏன் நிற்கிறாய்? இவரைக் கைது செய்து கொண்டு போ!" என்று இறைந்தான் மாணிக்க வாசகம். நேர்மை பணத்தைக் காலால் உதைத்துத் தள்ளியது!

முதலியார், வானமே சரிந்து தனது தலையில் விழுந்தது போல் நிலை கலங்கி நின்றார். தன்னை நோக்கி விலங்கைப் பூட்ட வரும் ஆளைக் கண்டு அறிவு மயங்கினார். அப்புறம் நினைவின்றிக் கீழே விழுந்து விட்டார்.

* * *

செல்வக்கொழுந்து முதலியாரின் வழக்கு மிகப் பிரபல மாய் நடைபெற்றது. செல்வரின் வழக்காதலால், இதன் முடிவைக் காணப் பலரும் விரும்பினார்கள். ஆதலால் நீதி மன்றத்தில் மக்கள் திரளாகக் கூடினர்.

நீதிமன்றத்திலுள்ளோர் யாவரும் முதலியாருக்கு மிகவும் வேண்டியவர்கள். ஆயினும் முறைப்படி எல்லாம் நடந்தன. வழக்கறிஞர்கள் பலர் முதலியார் பக்கத்தில் வாதித்தார்கள். சர்க்கார் வக்கீல் மாணிக்கவாசகத்தின் குறிப்புக்களைக்கொண்டு வாதித்தார். பல சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். வழக்கு முடிவடைந்தது.

நீதிபதி தமது தீர்ப்பில் "செல்வக்கொழுந்து முதலியார் குற்றவாளி என்பதற்குப் போதுமான சாட்சியம் இல்லை. அவருக்கு எதிராகச் சாட்சி சொன்னவர்கள் மொழி நம்பத்தக்கதாயில்லை. மேலும் பெரிய மனிதர்

ஒருவர் சிறிய இலாபத்தைக் கருதி இச்செயல் செய்வார் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதன்று. இன்ஸ்பெக்டர் போதுமான அனுபவம் இல்லாதவர். அதனாலேயே ஆராய்ந்து பார்க்காமல் அவசரப்பட்டு ஒரு பெரிய மனிதருக்கு அவமானத்தை உண்டுபண்ணிவிட்டார். இது வருந்தத்தக்க விஷயம். இதனால் இன்ஸ்பெக்டர் தனது வேலைக்குத் தகுதியற்றவர் என்பதை வெளிப்படுத்தி விட்டார் என்றே நினைக்கவேண்டியிருக்கிறது" என்று தெரிவித்தார்.

இத்தீர்ப்பைக்கேட்டதும் கூடியிருந்த மக்கள் ஆரவாரம் செய்தார்கள். வழக்கறிஞர்கள் மகிழ்ந்தனர். முதலியார் புன்சிரிப்புடன் நீதிபதிக்கு வணக்கஞ்செய்துவிட்டு வீடு சேர்ந்தார். மாணிக்கவாசகம் தீர்ப்பைக் கேட்டுத் திடுக்குற வில்லை. 'நமது கடமையைச் செய்துவிட்டோம்' என்ற மனநிறைவுடன் தலை நிமிர்ந்து வெளியே வந்தான். ஆனால், மக்கள் பலர் அவனைப் பார்த்து எள்ளி நகையாடினர்.

* * *

நீதிபதியின் தீர்ப்பால் மாணிக்கவாசகத்தின் வேலை போயிற்று. 'நேர்மை அளித்த பரிசு இது!' என்ற நினைப்புடன் அவன் வீடு வந்துசேர்ந்தான். திருநாவுக்கரசு முதலியார் வாயில் வந்தபடி அவனைத் திட்டினார்; தலையில் அடித்துக்கொண்டார். தாயாரும் வருந்தினாள். மாணிக்கவாசகம் பொறுமையுடன் இருந்தான்.

ஆசிரியர் தி. சி. குழந்தைவேலன் அவர்கள் எழுதியது

காதற்கனி

(இலக்கியச் சிறு கதைகள்)

இலக்கிய மதிப்புடைய இப்புத்தகத்தை எல்லோரும் புகழ்கிருர்கள்

❋ இராவ் சாகிப் S. வையாபுரிப் பிள்ளை அவர்கள் முன்னுரையில் கூறுவது:—'சங்க இலக்கியங்களை இனிய பூஞ்சோலை என்று சொல்லலாம்......ஆனல், இப்பூஞ்சோலைக்குச் செல்லும் வழி எளியதன்று......அருவழியில் தக்க துணையோடு சென்ருலன்றி, பூஞ்சோலையிற் சென்று பயனெய்தமுடியாது. பயனெய்த உதவும் வழித்துணையாக இந்நூல் அமைந்துள்ளது என நம்புகிறேன்.'

❋ திருச்சி ரேடியோ (20-2-46):—'இந்நூலால் தமிழ் மாணவர்கள் பெரிதும் பயனடைவார்களென்பது திண்ணம்' என்று, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் (முன்னுரையில்) சொல்கிருர். இந்தச் சொல்லுக்கு மேலே நான் என்ன சொல்ல இருக்கிறது? தமிழ் மாணவர் மட்டுமல்ல, தமிழ் ஆசிரியர்களுமே பயன் பெறுவார்கள் என்று சொல்லவா? மாணவரும் ஆசிரியரும் எப்படிப் போனலும், இந்த இரண்டே பிரிவுகளில் அடங்காத மற்றப் பெரும்பான்மையினரும் நன்ருக அறிந்து இன்புறக்கூடிய வகையில் சொல்லிப்போகிருர் ஆசிரியர்....

(திரு. சண்முகசுந்தர முதலியார் அவர்கள், B. A. B. L.)

❋ விமர்சனம் (30-11-45):—'தமிழ் மொழி வளர்ச்சியை விரும்பும் ஒவ்வொரு தமிழ் மகன் கையிலும் இப் புத்தகம் திகழவேண்டியது அவசியம். பழந்தமிழின் பாங்கு இந்நூலில் எளிய நடையில் எடுத்துக் காட்டப்படுகிறது.'

❋ சுதேசமித்திரன் (24-3-46) :—'சங்க நூல்களில் ஒன்ருன ஐங்குறுநூற்றிலிருந்து காதல் சுவை நிரம்பிய சில செய்யுட்களை எடுத்துக் கதை ரூபத்தில் அமைத்திருக்கிருர் இப் புத்தகத்தின் ஆசிரியர். பண்டைக் காலச் செய்யுட்களின் கருத்துக்களை விளக்க இதைவிட நல்ல முறையைக் கையாள முடியாது. ஆசிரியர் மிகவும் எளிய நடையில் கதைகளை எடுத்துச் சொல்லியிருக்கிருர். ...சங்கச் செய்யுட்களைப் பொது மக்களுக்கு இந்த வழியில்தான் புகட்டவேண்டும். இப்புத்தகம் தமிழர்கள் படிக்கவேண்டிய மிக மிக அவசியமான புத்தகங்களில் ஒன்று.'

❋ ஆனந்த விகடன் (23-12-45) :—'......தமிழ் இலக்கியங்களில் ஆர்வம் உள்ளவர்கள் அனைவரும் இப்பிரசுரத்தை விரும்பி வரவேற்பார்கள்.'

❋ கலைவாணி (1-12-45) :—'தமிழ்ப் பண்பாட்டுக்கு மாறுபடாத முறையில் கற்பனை அமைந்திருக்கிறது. கதை சொல்லும் நடை மிக்க எளிமையாகவும் இனிமையாகவும் இருக்கிறது. யாவரும் படிக்கலாம்; பலமுறை படிக்கலாம். நடைப்போக்கு நம்மை வசீகரிக்கிறது. இன்னும் ஒன்று: தூய்மையான தமிழ். கதை சொல்லிக்கொண்டு போகும்போதே வேறு பல இலக்கியங்களிலிருந்து நல்ல கருத்துக்களையும் வர்ணனைகளையும் எடுத்துக் கூறுகிருர் ஆசிரியர்.'

❋ ஹநுமான் (16-12-45) :—'காதலை, பண்டைய இலக்கியங்களில் எப்படி விவரித்திருக்கிருர்கள் என்று தெளிவு படுத்த ஆசைகொண்ட ஆசிரியர், ஐங்குறுநூறு என்னும் சங்க நூலிலிருந்து சில காதற் காட்சிகளை எடுத்துக் கதை உருவில் எழுதியிருக்கிருர். பேராசிரியர் திரு. S. வையாபுரிப் பிள்ளை அவர்களின் முன்னுரையுடன் வெளிவந்துள்ள இந்நூல், எல்லோரும் படித்து இன்புறக்கூடியதாக இருக்கிறது.'

❋ சக்தி (பார்த்திப, பங்குனி) :—'நல்ல தமிழ். நல்ல புத்தகம்.'

இதன் விலை ரூ. **1—4—0**

(தபால் செலவு தனி)

மணி மன்றம்

தமிழ் நூல் வெளியீட்டகம்

மதுரை ரோடு -:- திருச்சிராப்பள்ளி

உதயகுமரன்

(இலக்கிய நாடகம்)

ஆசிரியர்

தி. சி. குழந்தைவேலன்

அவர்கள் எழுதிய அரிய நூல்

மணிமேகலை என்னும் இலக்கியப் பூஞ்சோலையில் பூக்குமுன் உதிர்ந்துபோன மலர், உதயகுமரன்!

வீரமாம் நறுமணத்தைச் சோலையெங்கும் வீசி வெற்றியாம் ஒளிசிறக்க வேண்டிய மலர், காமமாம் தீயில் கருகி விழுந்துவிட்ட செய்தி வருந்துதற்குரியது; இளைஞர்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் தக்கது.

இலக்கியத்துடன் கற்பனை கலந்த இனிய கதைப்போக்கு; பல்வகைச் சுவை நிரம்பிய காட்சிகள்; நுண்ணறிவு செறிந்த உரையாடல்; எளிய செந்தமிழ் நடை. இவை யாவும் நாடக உருப்பெற்று நலங் கனிந்து ஒளிர்கின்றன.

விரைவில் வெளிவரும்.